சிவாச்சாரியாரின்



# அருள்ஜோதி

## சமய சஞ்சிகை



ஆசிரியர்

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துமத குருபீடாதிபதி
சிவாகம ஞானி
சிவாச்சார்ய சிம்மம்

அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின் ............

# அருள் ஜோதி



எனும் ஆன்மீக இதழ் வெளி வருகிறது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

46, 7வது ஒழுங்கை, (புளூமெண்டோல் வீதி),
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.
தொலைபேசி: 2393436, 0722-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாத விஷேசம்

| தமிழ் திகதி | ஆங்கில திகதி | கிழமை | விஷேசம் |
|---|---|---|---|
| மாசி 01 | 13-2-2004 | வெள்ளி | மாதப்பிறப்பு, சங்கிர சாந்தி |
| மாசி 04 | 16-2-2004 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| மாசி 06 | 18-2-2004 | புதன் | பிரதோஷ விரதம், மஹா சிவராத்திரி |
| மாசி 08 | 20-2-2004 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| மாசி 12 | 24-2-2004 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| மாசி 14 | 26-2-2004 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| மாசி 15 | 27-2-2004 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| மாசி 19 | 02-03-2004 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| மாசி 21 | 04-03-2004 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| மாசி 22 | 05-03-2004 | வெள்ளி | மாசி மகம் - நடேசர் அபிஷேகம் |
| மாசி 23 | 06-03-2004 | சனி | பௌர்ணமி விரதம் |
| மாசி 27 | 10-03-2004 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| பங்குனி 01 | 14-03-2004 | ஞாயிறு | பங்குனி மாதப் பிறப்பு, சங்கிர சாந்தி |
| பங்குனி 04 | 17-03-2004 | புதன் | ஏகாதசி விரதம் |
| பங்குனி 07 | 20-03-2004 | சனி | அமாவாசை விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்

# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 08 மாசி – பங்குனி 2004 ஜோதி – 72

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.

## மலர்ந்த புஸ்பங்கள்

1. ஆசியுரை, அருளுரைகள்
2. லிங்கோற்பவர் யார்?
3. சிவராத்திரி விரத மகிமை
4. இல்லக விளக்கது இருள் கெடுப்பது
5. மங்கள ரூபிணி
6. நமஸ்காரம்
7. கவிச்சக்கரவர்த்தி கம்பன்
8. அருள்ஜோதி வினா விடை
9. மாணவர் பகுதி
10. மங்கையர் சிந்தனை


**சர்வதேச இந்துமத குருபீடம்**
**சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்**
(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)
இல. 46, 7வது லேன், புளூமெண்டால் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
தொலைபேசி, தொலை நகல்: 0094-11-2393436
செல்லிட பேசி: (0094)-0722-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசு/008/T

# இலங்கை இந்துமத குருபீடாதிபதி



எமது அன்புத் தந்தையார்
சிவாச்சார்ய சிம்மம் - சிவாகம ஞானி
அமரர்
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"



எமது அன்புத் தாயார் அமரர்


**திருமதி செல்லம்மாள் சாம்பசிவ சிவாச்சாரியார்**

அவர்களின் திருவடிகளில் இம்மலரை
சமர்ப்பணம் செய்கிறோம்.

- ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீ சந்திர மௌளீஸ்வராய நம
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசர்ய பரம்பராகத

# ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்

அவர்கள்

ஸ்ரீமடம் ஸமஸ்தானம்,
1, சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502

## அருளாசியுரை

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி "சிவாச்சார்ய சிம்மம்" அமரர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் **"அருள்ஜோதி"** எனும் ஆன்மீக சஞ்சிகை சமய கட்டுரைகள், ஆகம, புராண கட்டுரைகள், வினா – விடை, மாணவர் பகுதி, மங்கையர் பகுதி, செய்திக் கோவை என பல சிறப்பு அம்சங்களுடன் வெளிவருவது அறிந்து சந்தோஷம்.

இம்மலரின் ஆசிரியர் "கலாநிதி" ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் சமயப் பணியைப் பாராட்டி, ஆன்மீக அன்பர்களுக்கு அருளின்பம் ஊட்டும் மலராக **"அருள்ஜோதி"** மலர ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

'சிவாகம பூஷணம்' 'உபன்னியாச ரெத்தினம்'
'குமரகுருமணி'

**கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியார்**

ஸ்தாபக தலைவர்,

**சர்வதேச இந்துமத குருபீடம் இலண்டன்**
**66, Victoria Avenue, Wembley London.**

# ஆசியுரை

இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியும், எமது தந்தையாருமாகிய "சிவாச்சார்ய சிம்மம்" "சிவாகம ஞானி" "அருள் ஜோதி" ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் ஞாபகார்த்தமாக சர்வதேச இந்துமத குருபீடம் ஸ்தாபித்து வருடந் தோறும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமய, இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அகில இலங்கை ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் சமய இலக்கிய அறிவுப் போட்டிகளை நடாத்தி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும், மற்றும் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெங்கலப் பதக்கங்கள் வழங்கி வருவதும், வருடந் தோறும் சிவாச்சாரியாரின் ஞாபகார்த்தமாக ஆன்மீகப் பெருவிழாவை சிறப்பாக நடாத்தி சமய, சமூக, கலைப் பிரமுகர்களின் ஆன்மீக சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி பட்டம் வழங்கி கௌரவித்து வரும், சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகத் திகழும் எமது அன்புச் சகோதரன் ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஐயப்பதாஸக் குருக்கள் எமது தந்தையாரின் ஞாபகார்த்தமாக அருள் ஜோதி என்னும் ஆன்மீக சஞ்சிகையையும் வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது.

ஸ்ரீ ஐயப்பதாஸனின் பணி மென்மேலும் தொடர்ந்து சிறப்புக்கள் பற்பல பெற எமது குருநாதரின் திருவடிகளை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

- சுபம் -

அன்பு அண்ணன்
**சிவஸ்ரீ சாம். ஷண்முகநாதக் குருக்கள்**
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



நவாலியூர்

"பிரதிஷ்டா சிரோன்மணி"

# பிரம்மஶ்ரீ சாமி விஸ்வநதக் குருக்கள்

## ஆசியுரை

என்றும் எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக சர்வதேச இந்துமத குருபீடம் அமைத்து கடந்த பல ஆண்டுகளாக "அருள்ஜோதி" என்றும் ஆன்மீக இதழை வெளியிட்டு வருகிறார்.

சமய சம்பந்தமான பல விடயங்களையும், மாணவ சமூகத்திற்கு பலன் தருகின்ற வகையில் அருள்ஜோதி வினா - விடைகளையும் வெளியிட்டு வருவது பாராட்டுதலுக்கு உரியது.

இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளில் உள்ளவர்களும் படித்து பயன்பெறுகின்ற வகையில் எல்லா நாடுகளுக்கும் அருள்ஜோதி மலர் அனுப்பி வைக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

எமது பிராமண சிவாச்சாரிய சமூகத்திற்கு பெருமை தேடித்தருகின்ற வகையில் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஆற்றி வருகின்ற பணிகள் மென்மேலும் சிறப்புற எமது வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சுபம் -

சுவிசித்தாராம றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
Tel: 265063

பிரம்மஶ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
நவாலியூர் - கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சிவாகம வித்வான் அவுஸ்திரேலியத் திருமணப்பதிவாளர்

## டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்.

சர்வதேச இந்துமத குருபீட அவுஸ்திரேலியப் பொறுப்பாளர்
அவுஸ்திரேலிய இந்துக்குருமார் கவுன்சில் மேல் மாநிலப்பிரதிநிதி

ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்.

மண்டோகிளப், பேர்த் அவுஸ்திரேலியா

---

### இலங்கை சர்வதேச இந்துமத குருபீடத்தின் சமய சமூக சேவைகளுக்கு அவுஸ்திரேலிய இந்துக் குருமார் கவுன்சிலின்

# நல்வாழ்த்துப் பாராட்டிதழ்

ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பீடத்தை கடந்த இருபத்திரண்டு வருடத்தின் முன்னர் ஆரம்பித்து அகில இலங்கையின் முதலாவது ஸ்ரீசபரிமலை சாஸ்தா குருபீடத்தின் அதிபதியாக விளங்கும் கலாநிதி சிவஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள், தமது தந்தையும் குருவுமாகத்திகழும், இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியின் பெயரால் கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னதாக சர்வதேச இந்துமத குருபீடம் ஸ்தாபித்து இதுவரைகாலமும் சிறப்பாக நமது சைவசமயத்திற்கும் ஆதிசைவப் பிராமணக்குருமார் சமூகத்திற்கும், இந்துதமிழ்மக்களுக்கும் அரியசேவைகளைப் பலவற்றாலும் ஆற்றிவருவதை அனைவரும் அறிவர். இவர் வருடந்தோறும் நடாத்திவரும் ஆன்மீகப்பெருவிழாவில், பல்துறையிலும் மூதறிஞர்களாக திகழுவோரையும், சமய, சமூகசேவைகளில் தலைசிறந்தோரையும் தேடிஅழைத்துப் போற்றிக் கவுரவம்செய்தும் உலகறியச் செய்து புகழ்பரப்பிநிற்பவர். இவரது சேவைத்திறனை உலகெங்கணும் வாழும் நம்மவர்கள் நன்கு அறிந்து இவரை அங்கெல்லாம் அழைத்துப்பெருமைப்படுத்தி, இவரும் சர்வதேசங்களிலும் இந்துமத குருபீடத்தின் கிளைகளை நிறுவி தமது சமய சமூக, கலாச்சார சேவைகளை உலகளாவ விஸ்தரித்துள்ளமை என்றும் எவராலும் பாராட்டற்குரிய அரும்பணியெனலாம். உள்நாட்டில் பள்ளிக்கூடங்கள் தோறும் சமயபாடப்போட்டிகளை நடாத்தி பரீட்சைகளையும் நடாத்தி அவற்றில் தேறிவர்களுக்கு புலமைப்பரிசில்களையும், உயர்கல்வி மேற்கொள்ள உறுதுணையான பல உதவிகளையும் தமது அமைப்பின் மூலம் ஒழுங்குசெய்துவரும் அரும்பெரும் சேவையை அரசும் அனைத்துமக்களும் அவ்வப்போது பாராட்டிப் புகழ்வதைக் கேட்கும்போது "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்று எண்ணத்தோன்றும். அண்மையிலும் ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குச் சுற்றுலா மேற்கொண்டு ஆங்காங்கே போட்டிகளை வைத்து சிறார்களை ஊக்குவித்துப் பல பரிசில்களையும் வழங்கி நாடு திரும்பியுள்ளார். மாதந்தோறும் வெளியிடும்"***அருள்ஜோதி***" சஞ்சிகையில் அருமையான கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்களை வெளியிடுவதனால் அது பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் பெருவிருந்தாய் அமைகின்றது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தமிழகத்திலும் நடாத்தவுள்ள ஆன்மீகப் பெருவிழா சிறக்கவும், கலாநிதி சிவஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழவும் இவரது அரிய சேவை மேன்மேலும் நனி சிறந்தோங்கவும் ஸ்ரீ சொர்ணாம்பிகையுடனுறை ஸ்ரீபொன்னம்பலவாண சுவாமியை வழுத்தி வாழ்த்துவோமாக!

வாழ்க!சுபம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

பேர்த்.
அவுஸ்திரேலியா

(சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்)
"ஸ்தாபகர்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாரம்பரிய வைத்தியம் - கூடலூர் நீலகிரி மாவட்டம்

'வைத்திய கலாபூஷன்' பாரம்பரிய வைத்தியர்

# P. M. பாபுராஜ்



வாத நோய், கால், கை முறிவு நரம்பு சம்பந்தமான, எலும்பு சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் பாரம்பரிய முறையில், சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.



தொடர்புகளுக்கு:
'பாரம்பரிய வைத்தியர்' 'வைத்திய கலாபூஷன்'
**P. M. பாபுராஜ் அவர்கள்**

# பாரம்பரிய வைத்தியசாலை

காலிகட் ரோட்,
நீலகிரி மாவட்டம்
கூடலூர் (கல்பனா தியேட்டர் எதிரில்)
தமிழ்நாடு,
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கோற்பவர் யார்?

காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

அநேகமாக எல்லா சிவாலயங்களிலும் கர்ப்பக் கிருஹத்தின் சுவரில் மேற்குப் பக்கத்தில் லிங்கோத்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும் (சில கோயில்களில் மட்டும் இந்த இடத்தில் மஹாவிஷ்ணு இருக்கிறார்.) லிங்கோத்பவமூர்த்தி என்பது பரமேசுவரனுடைய அறுபத்துநான்கு மூர்த்திகளுக்குள் ஒன்று விருஷ்டாருடர், அர்த்தநாரீசுவரர், ஹரிஹரர், நடராஜர், காமாரி, பைரவர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், ஊர்த்வ தாண்டவர், ஜலந்தராஸுரஸம் ஹாரர், கால ஸம்ஹாரர் இப்படி அறுபத்துநான்கு மூர்த்திகள் உண்டு. அவர்களுள் ஒன்று லிங்கோற்பவ மூர்த்தி.

அந்த மூர்த்திதான் சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்கு பின்புறம் காணப்படுவது, அதில், லிங்கத்துக்குள் ஒரு திவ்யமூர்த்தி இருக்கும். அதில் ஜக்மகுடம் லிங்க வட்டத்துக்குள் முடியாமலே இருக்கும். அதன் பாதமும் லிங்கத்தின் அடியில் முடிகின்ற வரைக்கும் தெரியாது. இந்த மூர்த்திக்குக் கீழே ஒருவராக மூர்த்தி இருக்கும். மேலே ஹம்ஸரூபத்தில் ஒரு மூர்த்தி இருக்கும்

## இந்த லிங்கோத்பவர் யார்?

ஸ்ரீ நத்திராபிஷேகம் பண்ணுவதற்கு முன்பு ஒரு சுலோகம் சொல்லிவிட்டு அப்புறம்தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம் அந்த சுலோகம்:

**'ஆபாதால நப ஸ்தலாந்தபுவன ப்ரஹ்மாண்ட
மாவிஸ் புரத்ஜ்யோதி: ஸ்பாடி கலிங்க மௌலி விலஸத்
பூர்ணேந்து வாந்தாம்ருதை: அஸ்தோகப்லுதம் ஏகம் ஈசம் அநிசம்
ருத்ராநு வாகான் ஜபன் த்யாயேத் ஈப்ஸித ஸித் தயே (அ) த்ருதப்தம்
விப்ரோயிஷிஞ்சேத் சிவம்'**

இந்த சுலோகத்தில் என்ன தெரியுமா சொல்லியிருக்கிறது? பாதாள முதல் ஆகாச பரியந்தம் எல்லையில்லாத அநந்த ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

ஸ்படிக லிங்கத்துக்கு ஒரு வர்ணமும் சொல்ல முடியாது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமோ இதனுடைய வர்ணத்தை அது பிரதிபலிக்கும். குண தோஷம் இல்லாதது அது. ஞானம் எப்படிப் பரிசுத்தமாக இருக்கிறதோ, அப்படி ஸ்படிகலிங்கம் இருக்கிறது. அதன் பின் பச்சை வில்வத்தை வைத்தால் பச்சையாகத் தோன்றும். சிவப்பான அரளியை வைத்தால் சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகாரமானது. பரப்பிரம்ம ஸ்வரூபம் நிர்விகாரமாக இருந்தாலும் நம்முடைய மனோபாவத்தை எப்படி வைக்கிறோமோ, அப்படித் தோன்றும் என்பதற்குத் திருஷ்டாந்தமாக இந்த ஸ்படிகலிங்கம் இருக்கிறது அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் மறைக்காது. அதற்குப் பின்னால் உள்ள வஸ்துக்களையும் அதன் வழியாகப் பார்க்கலாம். பரம சுத்தமாக நிஷ்களங்கமாக இருக்கும் நிர்க்குணமான பரமாத்ம வஸ்துவுக்கு அது திருஷ்டாந்தம். நினைக்கிற ரூபமாக அது தெரியும்.

மேலே சொன்ன சுலோகப்படி அதன் சிரஸில் பூர்ண சந்திரன் இருக்கிறது. "பூர்ணேந்து" என்று சுலோகத்தில் வருவது, 'பூர்ண இந்து'. இந்து என்றாலும் சந்திரன் என்றாலும் ஒன்றுதான். ஈசுவரன் ஜடையும், கங்கையும், கண், காது, மூக்கு, கை, கால் முதலிய அவயவங்களும் கொண்ட "ஸகள" ரூபத்தில் வருகிறபோது அவர் மூன்றாம் பிறையை வைத்துக்கொண்டு சந்திர மௌளியாக இருக்கிறார். ரூபமே இல்லாத பரமாத்மா "நிஷ்கள" தத்துவமாயிருக்கிறபோது அங்கே சந்திரன், கங்கை எதுவும் இல்லை, அரூபமாயும் அல்லாமல், ஸ்வரூபமாகவும் அவயவங்களோடு இல்லாமல் லிங்கமாக ஸகள நிஷ்களமாக இருக்கிறபோது அவர் பூர்ண சந்திரனை உச்சியில் வைத்திருக்கிறார். அதிலிருந்து அமிர்தமே கங்கை மாதிரி கொட்டுகிறது.

யோகிகள் தமது சிரஸுக்குள் ஸகஸ்ரார கமலத்தில் உள்ள சந்திர மண்டலத்தில் ஜயோதி ஸ்வரூபத்திலிருந்து அமிருதம் ஒழுகும். அதனால் அவர்களுக்குப் பரமானந்தம் உண்டாகிறது. ஸமஸ்த பிரபஞ்ச ஸ்வரூபமான ஜயோதிர் லிங்கம் குளிர்ந்தால் லோகமெல்லாம் குளிரும். இதனால்தான் சிவலிங்கத்துக்கு ஓயாமல் அபிஷேகம் செய்வது. ருத்திர அபிஷேகத்துக்கு முன்பு சொல்லும் சுலோகம் இதை எல்லாம் அறிவுறுத்துகிறது.

ஸகல பிரம்மாண்டமும் சிவலிங்கம்தான். ஸ்ரீ ருத்திரத்தில் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ பதார்த்தங்களும் நல்லது கெட்டது எல்லாம் சிவ ஸ்வரூபம் என்று ஸ்ரீ ருத்திரம் சொல்கிறது.


லிங்கம் ஏன் வட்டவடிவமாய் இருக்கிறது? வட்டமான ஸ்வரூபத்துக்குத்தான் அடிமுடியில்லை; ஆதியில்லை, அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. ஆதியந்தம் இல்லாத வஸ்து சிவம் என்பதை லிங்காரம் காட்டுகிறது.

சரியான வட்டமாக (Circle) இல்லாமல் லிங்கம் நீள வட்டமாக (ellipse) இருக்கிறது. "பிரபஞ்சமே 'எல்லிப்டிக்' காகத்தான் இருக்கிறது. நம் சூரிய மண்டலத்தை (Solar System) எடுத்துக்கொண்டாலும் கிரஹங்களின் அயனம் நீள வட்டமாகத்தான் இருக்கிறது" என்று நவீன விஞ்ஞானத்தில் சொல்வதும் "பிரம்மாண்டம்" "ஆவிஸ்புரத்" என்று சாஸ்திரம் சொல்லும் லிங்க ரூபத்துக்கு ரொம்ப ஒற்றுமையாக இருக்கிறது.

யாராவது பந்துவை நினைக்கிறோம். சந்தோஷமாயிருக்கிறது; ஆனால் அவருடைய உருவத்தையும் பார்த்தால்தான் சந்தோஷம் பூரணமாகிறது. அவ்வாறே உருவற்ற சிவமும் ஒரு மூர்த்தியோடு வந்து அநுக்கிரகம் பண்ணினால்தான் ரொம்ப சந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு மட்டும் பரமாத்ம ஸ்வரூபத்தின் நிராகார (அருவ) உண்மை புரியும் உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அநுபவிக்கிற நமக்கு உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான் உருவற்ற பரமேசுவரன் அருவுருவான லிங்கமானதோடு நில்லாமல், அந்த லிங்கத்துக்குள்ளேயே திவ்ய ரூபம் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகில இலங்கை சமாதான நீதவானாக பதவியேற்ற ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் தனது தாயாரிடம் ஆசிபெற்ற போது (1997)



கனடாவில் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுடன் அன்பர் திரு. செந்தில்நாதன் செல்வன் செந்தில் பிரதீபராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தபீட மாதரணியினர் நடாத்திய ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜையில்
திரு. சிவானந்தராஜா தம்பதிகள் தீபாராதனை செய்கிறார்கள்.



ஸ்ரீ சாஸ்தபீட ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜையில் கன்னிப் பெண்களும்,
சுமங்கலிப் பெண்களும் குங்கும அர்ச்சனை செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ சாஸ்தபீட ஸ்ரீ வலக்ஷ்மீ பூஜையில் திரு. பத்மநாதன் தம்பதிகள் தம்பதிகளுக்கு தீபாராதனை செய்கிறார்கள்.



கனடா ரொறோன்டோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுடன். அவுஸ்ரேலியா சிவாகமகலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் இனுவில் தவில் வித்வான் சின்னராசா சுதாகரன். கொழும்பு நாதஸ்வர வித்வான் செல்வராஜா கணேசமூர்த்தி மற்றும் - நாதஸ்வர கலைஞர்கள். (15-7-2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தாபீட மாதரணியினர் நடாத்தும் திருவிளக்குப் பூஜையில்
குங்கும அர்ச்சனை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் மாதர்கள். (2003)




"சிற்பக்கலைமாமணி" சரவணமுத்து ஜெயகாந்தனின் சேவையைப் பாராட்டி லண்டன்
சாம்பசிவ ஷண்முகநாதக் குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார். அருகில்
ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஜெ. திவ்வியநாதன் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கோத்பவ மூர்த்தியாக இருக்கிறார். இப்படி ரூபத்தைக் காட்டினாலும் வாசஸ்தலத்தில் தமக்கு அடியும் இல்லை, முடியும் இல்லை என்று உணர்த்துவதற்காக, மேலே லிங்கவட்டத்துக்குள் ஜடாமுடி முடியாமலும், கீழே அதே மாதிரித் தம் பாதம் அதற்குள் அடங்காமலும் இருப்பதாகக் காட்டுகிறார்.

அடி முடி எல்லை இல்லாமல் அவர் ஜ்யோதி ஸ்வரூபமாக நின்றார். ஜ்யோதிர்மய லிங்கமாக ஆகாயத்துக்கும் பூமிக்குமாகப் பரமேசுவரன் உற்பவித்த இரவே சிவராத்திரியாகும்.

அப்படி ஜோதிஸ்வரூபமாகப் பரமேசுவரன் நின்ற பொழுது விஷ்ணு அவரது பாதத்தைப் பார்க்கப் பாதாளத்துக்குப் போனார். பூமியை கொல்லும் ஸ்லாபவம் வராஹத்துக்கு உண்டு. எனவே, அந்த ரூபத்தை எடுத்து கொண்டார். பிரம்மா ஹம்ஸ ஸ்வரூபமானார் பட்சிக்கு பறப்பது ஸ்வபாவம். பட்சியாகப் பறந்து ஜோதிலிங்கத்தின் முடி தேடிப்போனார் இரண்டு பேருக்கும் தேடிப்போனவை அகப்படவில்லை. ஹம்ஸம் வந்தது (நான் கண்டுவிட்டேன்) என்று பொய் சொல்லியது. அதனால்தான் பிரம்மாவுக்கு பிரத்தியேக பூஜை இல்லாமல் போய்விட்டது. பரிவாரமாக மட்டும் வைத்துப் பூஜை செய்வதுண்டு. புராண ஐதிஹ்யத்தில் இப்படி இருக்கிறது.

பிரம்மா ஹம்ஸரூபமாகப் போய்ப் பார்த்தும் சிவபெருமானின் சிரஸ் அகப்படவில்லை என்றும், விஷ்ணு வராஹரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை என்றும் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால் பரமாத்மா ஆதி அந்த ஹீனமான வஸ்து என்பது தான் சிருஷ்டி பரிபாலனம் எல்லாவற்றையும் கடந்த வஸ்து அது என்பதுதான் இப்படி அடி முடி தேடி பிரம்மாவும் விஷ்ணுவும் பெற முடியாதவரையே என் சாமர்த்தியத்தால் அறிய முடியும். என்கிற அகங்காரமில்லாமல், அன்போடு பக்தி செய்து உருகினால் வெகுசுலபத்தில் அவர் நமக்கு அகப்பட்டுவிடுவார். அன்பினாலே மிக மிக விரைவில் திருப்தி பெற்று அனுக்கிரகிப்பவர் 'சிவபெருமான்' என்பதாலேயே அவருக்கு ஆசுதோஷி என்று ஒரு பெயர் இருக்கிறது 'ஆஷுதோஷ் முகர்ஜி' என்று ஒரு சீர்திருத்த (Refomist) முக்கியஸ்தரைச் சொல்வார்கள். ஆசுதோஷி தான் 'ஆஷுகோஷ்' என்றாயிற்று. ஆசுகவி என்றால் கேட்டவுடனே கவிபாடுகிறவர் அல்லவா? இப்படியே ஸ்மரித்த மாத்திரத்தில் சந்தோஷித்து அநுக்கிரகம் பண்ணுகிற வள்ளல் தான் ஆசுதோஷி.

சகலப் பிரபஞ்சமும் அடங்கியிருக்கிற லிங்க ரூபமானது ஆவிர்பவித்த சிவராத்திரி மகாசதுர்த்தசி இரவில் அவரை அப்படியே ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும். அதைவிட ஆனந்தம் வேறில்லை.

**சர்வே ஜனாகா சுஹினோ பவந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹா சிவராத்திரி மஹிமை



ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி

**மாசிமாதத் தபர பக்கச் சதுர்த்தேசி**
**ஆசியருளு லிங்கோற்பவமாகும் - அன்று**
**மால் தேவர் மாந்தர் வணங்கி வழிபட்டு**
**மேல் வரங்கள் பெற்றார் இனிது.**

சிவனுடைய விரதங்களுள் மிகவும் சிறந்தது சிவராத்திரியாகும். இந்த விரதமானது மாசிமாதத்து கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியன்று அனுஷ்டிக்க வேண்டும்.

நமது வேலைகளெல்லாம் ஒடுங்கி புலன்கள் அடக்கி மனமும் சீவனும் ஆத்மாவிடம் ஒடுங்குவதுதான் இராத்திரி எனப்படும். எனவே சிவனுக்குரிய இராத்திரியிலே உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் மாயையிடம் ஒடுங்க மாயையும் இறைவனிடம் ஒடுங்கி ஒன்றுமேயில்லாமல் இருள் நிறைந்திருக்கும் காலம் மஹா பிரளயம் எனப்படும்.

அச்சமயம் சிவசக்தியான உமையாள் இரவு நான்கு ஜாமமும் சிவனைப் பூஜித்தாள். பூஜையில் மகிழ்ந்த சிவன் உமையை நோக்கி உனக்கு யாது வரம் வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருள, அதற்கு உமை சுவாமி தங்களை நான்கு ஜாமமும் பூஜித்த இந்த நாள் (இரவு) "சிவராத்திரி" எனப் பெயர் பெற வேண்டும். மேலும் இதுபோல தங்களை சிவராத்திரியிலே மெய்யன்புடன் பூஜிப்பவர்களும் தங்களின் அருளால் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்ய வேண்டும். என்று உமையவள் வேண்டினார். அப்படியே ஆகட்டும் என்று கூறி மகிழ்ந்தார்.

எனவேதான் அம்பிகை பூஜித்த இந்த இராத்திரி சிவபூஜைக்கு வழிபாட்டிற்கு மிகவும் சிறந்த நாளாயிற்று. எல்லா விரதங்களையும் விட பன்மடங்கு சிறந்தது சிவராத்திரி விரதமாகும்.

**'சிவராத்திரி உற்பவம்'**

ஆயிரம் சதுர் யுகங்கழிந்தால் பிரம்மாவுக்கு ஒரு பகல் அப்பகல் காலம் கழிந்து இரவு வந்தபோது பிரம்மாநித்திரை செய்தார். அப்போது சூரிய சந்திரா முதலிய கிரகங்களும் முப்பது முக்கோடி தேவர்களும் பூலோகமும் அழிந்தன.

மேலோகத்திலுள்ள முனிவர்கள் சனலோகத்தையடைந்தனர். நாற்றிசைக் கடல்களும் பொங்கி எழுந்து உமாதேவியார் தவஞ்செய்கின்ற காஞ்சிப் பதிமுதல் ஏனைய ஸ்தலங்களையும் விழுங்கி சப்த பாதங்களாயும் மூடி தேவலோகத்தையும் அழித்தன.

அப்போது விஷ்ணு சிவஸ்மரனை செய்துகொண்டு ஓர் ஆலிலையின் மீது குழந்தை வடிவாய் நித்திரை செய்தார் அதனைக் கண்ட முனிவர்கள் துதி செய்தார்கள். அறிதுயில் நீங்கி எழுந்த விஷ்ணு பூவுலகு பாதாளத்தில் ஆழ்ந்ததைக் கண்டு ஒரு பன்றியின் உருவு கொண்டு, பாதாளத்தில் சென்று அப் பூமியை தன் கொம்பினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு மீண்டும் வந்து முன்போல நிலைநிறுத்தினார்.

அந்த ஞான்று ஆயிரம் சதுர்யுகம் கழிய பிரம்மனுக்குப் பகல் பொழுதாகியது பிரம்மா நித்திரை விட்டெழுந்து பண்டுபோல் சிருஷ்டித் தொழில் செய்ய திருவுள்ளம் பற்றினான். சமுத்திரங்கள் யாவும் முன்னின்ற பாங்கடைந்தன. விஷ்ணு நான் கொம்பினாலே பூமியை எடுத்து நிலை நிறுத்தினோம் என்று நினைத்து அகந்தையுற்று பாற்கடலில் சேஷசயனத்தின் மீது அறிதுயில் செய்தார்.

அப்பொழுது பிரம்மா தேவர்கள், அசுரர்கள், மற்றைய ஜீவராசிகள் அனைத்தையும் படைத்து அவரவர்கட்குரிய ஸ்தானங்களைக் கொடுத்து, சிருஷ்டித் தொழிலை மிகப்பெரியதென்று எண்ணி இறுமாந்து எனைவிட வேறு கடவுள் இல்லை என்றெழுந்தார்.

நான் உறங்கும்போது உயிர்கள் யாவும் இறக்கும். நான் விழித்தபோது உயிர்கள் யாவும் இயங்கும். ஆகவே அனைத்துக்கும் மூல காரணம் நானே எனவே "நானே பரப்பிரம்மம்"

மேலும் பிரம்மன் தான் சிருஷ்டித்தவைகளைப் பார்த்து ஆணவம் கொண்டு பாற்கடலில் துயிலும் விஷ்ணுவைச் சென்றடைந்து அவர் மார்பிலே தாக்கி "எழும்பு" என்றெழுப்பினார். விஷ்ணு எழுந்ததும் நீ யார்? என்றார் பிரம்மா!

அதற்கு விஷ்ணு "நான் உனது பிதா நீ எனது மைந்தன் எனது உந்திக்கமலத்திலிருந்தன்றோ நீ தோன்றினாய்" என்றார்.

உனது உந்திக் கமலத்தில் யானுதித்த உண்மையினை நீ உணராமல் எனது பிதா என்றாய். நீ தூணிடை நரசிம்மமாகத் தோன்றியதால் உன்னைவிட தூணுக்கும் பெருமையுண்டோ?

அதேபோல உனக்கென்ன பெருமையிருக்கிறது எனது மகன் பிருகு முனிவன் கொடுத்த சாபத்திலேயே நீ பத்துப் பிறவிகளை எடுத்தாய் அவற்றைப் படைத்தவன் நானன்றோ? இவ்வாறு பிரம்மா கூறியதும்.

விஷ்ணு கோபித்து என்னைப் படைத்ததாகப் பெருமைப்படும் நீ பரமன் கிள்ளிய உன் தலையை இன்னமும் படைக்கவில்லை. அப்படியான நீ என்னை எப்படிப் படைக்க முடியும். எனவே நானே உனது பிதா. என்னிலும் பெரியவன் இல்லை சங்கரன் பாதி நான். பரமனும், பொருளும் நான். என்று பலவாறு புகழ்ந்தார் விஷ்ணு!

பிரம்மா கோபித்து நாமிருவரும் போர்புரிவோம் வென்றவரே பெரியவர் என்றபடி போர் புரிந்தார்கள். அப்போது இருவருக்கும் மத்தியில் பெரும் ஜோதி ஒன்று தோன்றியது. அதனுள் இருந்து அசரீரி வாக்குக் கேட்டது.

பிரம்ம விஷ்ணுக்களே நீவீர் இருவரும் ஏன் வீணாகச் சண்டையிட்டுக்கொள்கிறீர்கள்.

இந்த ஜோதியினுடைய அடியையோ அல்லது முடியையோ யார் முதலில் காணகிறீர்களோ அவர்தான் உம்மில் பெரியவர், இப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட அசரீதியை கொண்டு யார் பெரியவர் என அறிந்துவிடலாம் என எண்ணி படைக்கும் பிரம்மதேவர் அன்னபக்ஷி வடிவம் கொண்டு முடியைக் காண மேலே பறந்தார்.

காத்தல் தொழில் புரியும் விஷ்ணுவோ அடியைக்காண பன்றி அவதாரம் எடுத்துக்கொண்டு பூமியின் அடியை தோண்டிக்கொண்டு சென்றார். இருவரும் களைத்துவிட்டார்கள்.

அடியையும் காணமுடியவில்லை முடியையும் காண முடியவில்லை.

அப்பொழுது மேலேயிருந்து தாழம் பூவும், முருக்கம் பூவும் கீழ் நோக்கி வந்துகொண்டிருந்தன. இதைப் பார்த்த பிரம்மன் நில்லுங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்? எனக் கேட்க நாங்கள் உச்சியிலிருந்து வருகிறோம் என்று கூறின மலர்கள்.

அப்போது பிரம்மா நீங்கள் எனக்காக ஓர் பொய்ச்சாட்சி சொல்லவேண்டும். பூமியில் விஷ்ணு நிற்கிறார். அவரிடம் நான் வந்து முடியைப் பார்த்ததாகச் சொல்ல வேண்டும் என கேட்க அவையும் சம்மதித்து பூமிக்கு வந்து பொய் சாட்சி சொல்லின. அப்போது பிரம்மா பெருமையினால் பூரித்தார். நான்தான் பெரியவன் என கோஷித்தார். அந்த நேரம் சிவன் தனது சொரூபத்தைக் காட்டி பிரம்மாவே நீர் பொய் சொன்னதால் உமக்குக் கோவிலும் இல்லை பொய் சாட்சி சொன்னதனால் முருக்கம்பூ, தாழம் பூவுக்கும் நீங்கள் பூஜைக்கு உதவாத மலர்களாக கடவது என்று சாபமிட்டார்.

விஷ்ணுவே! உண்மையுரைத்ததனால் உமக்கு கோவிலும் காக்கும் தொழிலும் தந்தோம் என்று அனுக்கிரகம் செய்தார்.

இறைவன் அடிமுடியில்லாத சோதிப் பிழம்பாகி ஸ்தாணு வடிவாய் 'லிங்கோற்பவராய்' உற்பவித்த காலம் சிவராத்திரி காலமாகும்.

எனவே சிவனுடைய பூசைக்கு உகந்த காலம் லிங்கோற்பவ காலமாகும்.

**மாசிமாதத்தில் தோன்றும் மதிக்கலை குறைந்து தேயும்**
**ஆசிபன்னான்காம் பக்கத்து அரையிருள் ஜாமம் தன்னில்**
**தேசினால் விளங்குச் சோதிச் செஞ்சுடர் ஆகிநின்ற**
**காசிலாநுதல் கண் பெம்மான் தன்னுருக் காட்டி நின்றார்**

எனவே சிவராத்திரி பூராவும் கண்விழித்திருக்க முடியாதவர்கள் "லிங்கோற்பவ காலம் வரை" யாவது கண்விழிக்க வேண்டும்.

இந்த மஹா சிவராத்திரி விரதத்தை கிருதயுகத்தில் வினாயகரும் திரேதாயுகத்தில் முருகனும், துவாபர யுகத்தில் பிரம்மதேவரும், கலியுகத்தில் விஸ்ணுவும் விரதமனுஷ்டித்ததாக வாதுளாகமம் உபாகமமாகிய காலோத்தரம் முதலிய ஆகமங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி கால அபிஷேக நியமனம்

**முதற்காலப் பூஜை**

| | |
|---|---|
| அபிஷேகம் | - பஞ்சகவ்வியம் |
| வஸ்திரம் | - செம்பட்டாடை |
| பத்திரம் | - வில்வம் |
| நிவேதனம் | - பாலன்னம் |
| தூபம் தீபம் | - சந்தனம் |
| ஸ்நபனாபிஷேகம் | - விஷேச பூஜை |

**இரண்டாங்காலப் பூஜை**

| | |
|---|---|
| அபிஷேகம் | - பஞ்சாமிர்தம் |
| வஸ்திரம் | - மஞ்சள் பட்டாடை |
| பத்திரம் | - குருத்து |
| நிவேதனம் | - பாயசன்னம் |
| கந்தம் | - அகிற் சந்தனம் |
| தூபம் தீபம் | - நக்ஷத்திர தீபம் |
| விஷேச பூஜை | |

**முன்றாவது காலப் பூஜை**

| | |
|---|---|
| அபிஷேகம் | - பலோதகம் |
| வஸ்திரம் | - வெண் பட்டு |
| பத்திரம் | - முட்கிளுவை - விலாத்தி |
| நிவேதனம் | - எள்ளாதனம் |
| கந்தம் | - கஸ்தூரி சேர்ந்த சந்தனம் |
| தூபம் | - கருங் குங்குலியம் |
| தீபம் | - ஐந்துமுக தீபம் |
| விஷேச பூஜை | |

**நான்காவது காலப் பூஜை**

| | |
|---|---|
| அபிஷேகம் | - கந்தோதகம், கருப்பஞ்சாறு |
| வஸ்திரம் | - நீலப்பட்டு |
| பத்திரம் | - கருநொச்சி |
| நிவேதனம் | - சுத்தானம் |
| கந்தம் | - புனுகு சேர்ந்த சந்தனம் |
| தூபம் | - லவங்கம் |
| தீபம் | - வில்வதீபம் |

இவைகளே நான்கு யாம பூஜைக்கு விதித்த திரவியங்கள், சிறப்பாக விஷேசமாகத் தேடப்பட்ட அபிஷேகத் திரவியங்களும் பத்திர புஷ்பங்களும் அபூப வகைகளும் சோட சோபசார தீபாராதனையும் செய்யலாம்.

ஆத்மார்த்த பூஜைக்கு உகந்த இடம்: ஆலயம் புண்ணியஸ்தலம்; நதிக்கரை - மலை - புஷ்பவனம் ஆசாரியார் வீடு - தன் வீடு - இந்த இடங்களாம்.

சிவராத்திரி புண்ணிய காலத்தில் வழங்க வேண்டிய தானங்கள் சிவலிங்கம் - உருத்திராக்ஷம் வீபூதிப்பை - நவரத்தினம் பொன் வெள்ளி - பசு பூமி என்பனவாகும்.

இந்த மஹா சிவராத்திரி விரதத்தை கிருத யுகத்தில் விநாயகக் கடவுளும், திரேதா - சண்முகக் கடவுளும், துவாபரயுகத்தில் - பிரமதேவரும், கலியுகத்தில் விஷ்ணு மூர்த்தியும் விரதம் அனுஷ்டித்ததாக வாதுளம் உபாகமாகிய காலோத்தர முதலிய ஆகமங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக விளக்கது இருள் கெடுப்பது

## கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள்

மனிதனுக்கு துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது.

இருளில் ஒரு வேலையுஞ் செய்ய முடியாது: நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீர் என்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனைபேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்துணை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாத போது உணர முடியும். தாய் எப்படி எப்படி நம்மை வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லாத போது தானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கெரிந்தால் அந்த வீடு மங்களகரமாக இருக்கும். விளக்கின்றி இருள் சூழ்ந்த வீடு பேய் நடமாடும் பாழ் நிலம் போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு என வுணருக. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்காகும். பகலிலே பொருள்களை விளக்குவது கதிர் இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங் கனலும். இந்த மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்குப் பொருள்களை விளக்கும்.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியுந் தெரியாது ஒருவன் நின்று திகைக்கிறான்.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்று திகைக்கின்றபோது அங்கு யாராவது பேசினால் அநடதக் குரலோசையைக் கண்டு இன்னார் என்று விளங்கிக் கொள்கின்றோம். அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது

சொல்லக விளக்கது சோதியுள்ளது

என்றார் அப்பரடிகள்.

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு.

நாராயணமூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு மகிழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள்: முதலாழ்வார்கள் எனப்படுவார்கள்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற நாமங்களை யுடையவாகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநாட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசுபுரிந்த திருநகரம்.

தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டுப் பொய்கையாழ்வார் சென்றார். திருக்கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கி விட்டு ஒருசிறு இடத்தில் சென்று படுத்துறங்கி விட்டார்.

நடு இரவு, குளிர்காலம்: சிறு தூறல், வாடை வீசி உயிர்களை நடுக்கிக்கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்கு வந்து மெல்ல ஒதுங்கினார், படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச்சென்று எழுந்து இந்த இடம் ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் ஆகும் என்று கூறி, அவரையருகில் இருக்கச் செய்து தானும் இருந்தார்.

சிறிது நேரத்திற்குப்பின் அங்கு பேயாழ்வார் வந்தார், அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து, "இங்கு ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்" என்று கூறி நின்று கொண்டார்.

அச்சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்றார்கள் ஒரே அமைதி.

சிறிது நேரத்திற்குப்பின் கன்னங்கரேல் என்று ஒருவர் மொழுமொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருக்கிக் கொண்டு உட்புகுந்தார்.

அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம், ஒருவர் மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டுமே நிற்கவும் முடிவும், இப்போது நான்காவது ஒரு பேர்வழி வந்து நுழைந்து, நெருக்கத் தொடங்கினார்.

மூவரும் திக்குமுக்காடி விட்டார்கள் மூச்சுத் திணறியது.

ஐயா! நீர் யார் ? என்று கேட்டார்கள்.

பதில் இல்லை.

ஐயா! தங்களை யார் என்று அறிய விரும்புகின்றோம்.

ஒரே அமைதி மௌனம் நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்னார் என்று அறிய முடியும்?

உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்றார். அது சிறு விளக்கா? உலகில் உள்ள எல்லா விளக்குட்கும் பெரிய விளக்கு. ஐந்து கண்டங்கட்கும் ஒளி தரக் கூடிய அத்துணைப் பெரிய விளக்கு.

அந்த விளக்குக்கு நெய் ஒருபடி இருபடி விட்டால் கட்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பூமியே - அகல் : கடலே - நெய் : மேருகிரி திரி: சூரியனே - விளக்கு.

**வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய சுடரே விளக்காக - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்கவே என்று**

என்று பாடினார் பொய்கையாழ்வார்.

அடுத்தபடி, பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒரு விளக்கு ஏற்றுவாராயினார்.

அதற்கு, அன்பு - அகல்: ஆர்வம் - நெய்: எண்ணம் - திரி: ஞானமே - விளக்கு

**அன்பே தகளியா ஆவர்மே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்**

இவர்கள் இருவரும் பாடியபின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியில் தம்மை நெருங்கியது யார் என்று மூவரும் பார்த்தாகள். அவர் திருவுருவம் நன்கு தெரிகின்றது.

உடனே பாடுகிறார் பேயாழ்வார்.

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரு**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று**

இறைவனை யார் கண்டவர்? என்று சிலர் கேட்கின்றார்கள்

"கண்டேன் கண்டேன்" என்று கூறுகின்றார் பேயாழ்வார்.


ஆ! ஆ! என்ன அழகு? இதோ எங்களை நெருக்கியது எம்பெருமானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுடன் ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்
ஸ்ரீ மணிகண்ட சர்மா கலாநிதி ஜெ. திவ்வியநாதன் (Ex. M.P.)




ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜையில் 51 அக்ஷர தேவதா
பூஜையில் மங்கள உபகரணங்கள் வழங்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தாபீட. ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜையில் - தம்பதிகள் பூஜைக் காட்சி (2003)




ஸ்ரீ சாஸ்தபீட மாதரணியினர் நடாத்திய ஸ்ரீ வரலக்ஷ்மீ விரத பூஜையில்
திரு. ரவீந்திரன் தம்பதிகள் தீபாராதனை செய்கிறார்கள். (2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புத்தளம் மாவட்டம். புளிச்சாக்குளம் ஸ்ரீ ஞானபைரவர் ஆலய கும்பாபிஷேக குருமார்களும் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களும்.



ஸ்ரீ சாஸ்தாபீட. ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜையில் - திரு. R. சுரேஷ்குமார் தம்பதிகள் தம்பதி பூஜையில் தீபாராதனை செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் 13வது ஆண்டு விழாவில் இலங்கை இந்துமத குருபீடாதிபதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவச்சாரியார், சாமி விஸ்வநாதக் குருக்கள். நயினை சாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் சுன்னாகம் நா. சர்வேஸ்வரக் குருக்கள் உட்பட பல குருமார்கள் மேடையில் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன்: அழகிய திருமேனியைக் கண்டேன். விளக்குகின்ற கதிரவன் ஒளி போன்ற அழகிய வடிவத்தைக் கண்டேன். போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன். மற்றொரு கையில் அன்புள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கையும் கண்டேன், கடல் வண்ணனாம் எம் கடவுள்பால் இன்று இத்தனையுங் கண்டேன்"

எனவே, இதனை மொழி விளக்கு என உணர்க.

பாரதம் பாடிய வில்லிபுத்தூராரின் திருமைந்தர் வரந்தருள்வார் பாடுகின்றார்.

பாவரு தமிழால் பேர்பெறு பனுவல் பாவலர் பாதிநா ளிரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுதநன்னாடு
தேவரு மறையும் இன்னமுங் காணச் செஞ்சடைக் கடவுளைப்படாடி
ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர் பிறந்தநா டிந்தநன்னாடு

அகிலவுலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லாவற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனால் அவரை விளக்கென்றே கூறுகின்றார் மணிவாசகர்.

சோதியே சுடரே சூழொழி விளக்கே

அது "தூண்டா விளக்கு" "மாணிக்க மணி விளக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"க" கரங்கள் மூன்று "ல" கரங்கள் மூன்று "ஹ்ரீம்" காரங்கள் மூன்று, "ஹ" காரங்கள் இரண்டு "ஸ" காரங்கள் இரண்டு ஏ, ஈ என்ற உயிரெழுத்துக்கள் கூடிய வித்தையை யார் ஜபம் செய்கிறார்களோ அவர்கள் பரமாத்வா ஸ்வரூபமேயாவர்.

- சங்கர பகவத் பாதர்.

நான்கு பாகம் கொண்ட பூரண காயத்ரியினால் பிரதிபாதிக்கப்பட்டுள்ள பிரும்ம அபின்ன சித்சக்தியே பஞ்சதசி, ஷோடசி வித்யையினால் குறிக்கப்படுகிறது.

பஞ்சதசி, ஷோடசியைப் பொதுவாக ஸ்ரீ வித்யை என்று கூறிய போதிலும் ஏகாக்ஷரியாகிய புவனேஸ்வரி, காமகலை, தரயக்ஷரி, (பாலை) நவாக்ஷரீ, ஷோடசி, மஹாஷோடசி முதலியவைகளும் ஸ்ரீவித்யையில் சேர்ந்தனவேயாகும். இவற்றில் ஒன்றுக்கொன்று ஏற்றக் குறைவில்லை.

முதல், இடை, கடை என்ற மூன்று கண்டங்களில் முறையே நான்கு (க ஏ ஈ ல) ஐந்து (ஹ ஸ க ஹ ல) மூன்று (ஸ ஹ ல) எழுத்துக்கள் பொருந்தியிருக்கின்றன. இந்த எழுத்துக்களுடன் ஒவ்வொரு கண்டத்திலும் "ஹ்ரீம்" சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். எல்லாக் கண்டங்களிலும் காமன் எழுத்து வரும் முதல் கண்டத்தை கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பாகமாகவும், கடைக் கண்டத்தை இடுப்பிற்கு கீழ் உள்ள பாகமாகவும் தியானிக்க வேண்டும். இதனைப் பஞ்சதசாக்ஷரி மந்திரம் என்பர்.

இதற்கு முன்பாக லக்ஷ்மி மந்திரமான ஸ்ரீம். புவனேஸ்வரி பீஜமான ஹ்ரீம், காமன் பீஜமான க்லீம் இவைகளையும் சேர்த்து கொள்ள வேண்டும்.

## பஞ்ச தசாக்ஷியின் பெருமை

யஸ்ய நோபச்சிமம் ஜன்ம யல்வா சங்கர: ஸ்வயம்
தேனைவலப்பயதே வித்யா ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷி

---

ஒரு அக்ஷரம் மட்டும் உள்ள மந்திரத்தைப் பிண்டம் என்பார்கள். இரு அக்ஷரங்கள் இருந்தால் கத்ரி மூன்று முதல் ஒன்பது வரை அக்ஷரமுள்ள மந்திரங்களை பீஜம் 20 - க்கு மேற்பட்ட மந்திரங்கள் மாலா, காயத்ரி மந்திரம் 20 - க்கு மேற்பட்ட அக்ஷரங்கள் இருந்த போதிலும் மாலா மந்திரம் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா திரிபுரசுந்தரியின் மந்திரம் பஞ்சதசாக்ஷரி (15) ஷோடசி (16) என்று இரு வகைகளில் விளங்குகிறது. பஞ்சதசாக்ஷரி "க" ஹாரத்தில் தொடங்குவது "ஹ" ஹாரத்தில் தொடங்குவது "ஸ" ஹாரத்தில் தொடங்குவது என்ற மூன்று வகைகளில் பிரசித்தமாக உள்ளது. இவை முறையே காதி வித்யை என்றும் ஹாதிவித்யை என்றும், ஸாதி வித்யை என்றும் கூறப்படும். முதல் வித்யை மன்மதனாலும், இரண்டாவது அகஸ்தியர் மனைவி லோபா முத்திரையாலும், மூன்றாவது நந்தி தேவராலும் ஆராதிக்கப்பட்டதாகும். முதலில் கூறிய காதி வித்தையே மிகச் சிறப்புடையதாகும். இதிலுள்ள மூன்று கூடங்களில் முதலில் "க"விலும், இரண்டாவது "ஹ"விலும், மூன்றாவது "ஸ"விலும் தொடங்குகிறது. ஆகவே இது மூன்று வித்யைகளின் தன்மையைக் கொண்டதால் சிறப்பு பெற்றிருக்கிறது.

காதி பஞ்சதசாக்ஷரியின் பதினைந்து எழுத்துக்களும் திரிசதி நாமங்களுக்குத் தொடக்கமாக இருப்பதும் இந்த வித்யையின் பெருமைக்கு மற்றொரு காரணம். மேலும் மஹா ஷோடசி பூர்ணமான ரூபம் இதில் இடம் பெற்றுள்ளது. பஞ்சதசாக்ஷரி மந்திரமே உமாமகேஸ்வர ரூபமானது.

தேவியின் மூல மந்திரன் சிவன் எழுத்தான "க" சக்தி எழுத்தான "ஏ" மன்மதன் எழுத்தான "ஈ" பூமி எழுத்தான "ல".

சூரியன் எழுத்தான "ஹ" சந்திரன் எழுத்தான "ஸ" மதனவேன் எழுத்தான "க" ஆகாய எழுத்தான "ஹ" இந்திரன் எழுத்தான "ல"
பரை எழுத்தான "ஸ" மதனவேள் எழுத்தான "க" மாலின் எழுத்தான "ல" ஆகியவை கொண்டது.

இம்மூன்று கூடங்களில் எழுத்துக்கள் முடிவில் மாயையின் எழுத்தான "ஹ்ரீம்" மும்முறை சேர்ந்து அமைந்தது. (எழுத்தின் விளக்கங்களையும் அவைகளின் உச்சரிப்பும் குருமுகமாக அறிய வேண்டும்).

"க" ஹாரங்களும் "ஹ" சிவனது. அம்சம், ஆக ஐந்து எழுத்துக்கள் மகேஸ்வரனது பாகம். மூன்று கூடங்களிலும் இறுதியிலுள்ள "ஹ்ரீம்" ஹாரங்கள் மூன்றும் உமாமகேஸ்வரா இருவருக்கும் உரியன. பாக்கியுள்ள ஏழு எழுத்துக்கள் ஏஈல + ஸல + ஸல ஆகியவை அம்பிகைக்கே உரியவை. இந்த பஞ்சதசாக்ஷரியை முதலில் ஐம் க்லீம் ஸௌ என்று சேர்த்து ஜபிப்பது ஸௌபாக்ய வித்தை. இப்படித்தான் ஜபிக்க வேண்டும்.

ஐம் க்லீம் ஸௌ என்கிற பாலா மந்திரம் சேரும்போது பஞ்சதசாக்ஷரி ஸௌம்யமாகிறது. இந்த ஸௌபாக்ய வித்யை ஜபம் காதி வித்யைக்கு மட்டுமே பொருந்தும் (சந்நியாசிகள் மட்டுமே பாலா மந்திரத்தைச் சேர்க்காமல் ஜபிக்கலாம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷோடசீ மகிமை

வக்த்ர கோடி ஸகஸ்ரைஸ்து ஜிஹ்வா கோடி சதைரபி
வர்ணிதும் நைவ சக்யேயம் ஸ்ரீ வித்யா ஷோடசாக்ஷி

ஷோடசீ-லகு ஷோடசி, மஹா ஷோடசி என இருவகைப்பட்டது. "லகு"வில் பஞ்சதசாக்ஷரின் இறுதியில் ஸ்ரீம் என்ற லக்ஷ்மி பீஜம் சேர்த்து 16 எழுத்தாகும் .

"மஹா"வில் வாக்பவ காமராஜ சக்தி கூடங்கள் மூன்றும் மூன்று எழுத்துக்களாகக் கணக்கிடப்பட்டு வேறு 13 பீஜங்கள் 16 எழுத்துக்களாகின்றன. காதி பஞ்ச தசாக்ஷரியைப் பூர்ணமாக இது கொண்டுள்ளதால் இதற்குப் பூர்ண ரூபா ஷோடசி என்று பெயர். பிஜ ரூபா ஷோடசியில் காதி பஞ்சதசாக்ஷரியின் மூன்று கூடங்களுக்குப் பதில் பாலா மந்திரத்தின் மூன்று பீஜங்கள் இடம் பெறுகின்றன.

## மாத்ருகா ரூபினி

முகேபி ஜடில துர்கதி சோகே விஸ்மாதிய: க்ஷணம் பவதீம் 1
ஏகோபவதி ஸஜந்தூர் லோகோத்ர கீர்த்திரேவ காமாக்ஷி 1

- மூக பஞ்ச சதி

மூகனர்க (ஊமை) இருப்பினும் ஒரு கணம் உன்னை நினைப்பவள் உலகத்தில் உயர்ந்த கீர்த்தியை அடைய முடியும் என்று மார்தட்டிக் கூறுகிறார் மூகர், அம்பிகையே வாக் ஸ்வரூபமாக இருப்பவள். அவள் உருவம் முழுவதும் அக்ஷரங்கள் அவள் உடல் முழுவதும் அகாராதி க்ஷகாரந்தங்கள்.

நம்முடைய உடம்பில் நாற்றமுள்ள வஸ்துக்களே நிரம்பியுள்ளன. இந்த ஆபாசங்களுக்குள் அறிவு என்ற மணிச் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் மந்திர சாஸ்திரங்களிலுள்ள விஷயங்கள் பலவற்றையும் தனது "பிரபஞ்ச சாரம்" என்ற நூலில் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறியிருக்கிறார். அந்நூலின் காப்புச் செய்யுளில் அவர் கூறுவதாவது.

---

"சிருங்கேரி" (மந்த்ராணாம் மாத்ருகாதேவி) என்ற பிரதிபா புத்தகத்தில் விவரமாகக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகர முதலான உயிரெழுத்து வர்க்கம் "க" வர்க்கம், "ச" வர்க்கம், "ட" வர்க்கம், "த" வர்க்கம், "ப" வர்க்கம், "ய" வர்க்கம் ஆகிய ஏழு எழுத்து வர்க்கங்களையும் தனக்கு வாய், கை, பாதம், இடை, இதயம் ஆகிய அவயவங்களாகக் கொண்டவளாய் உலகனைத்துக்கும் ஈஸ்வரியாய் உள்ள அம்பிகை நமக்கு மனத் தூய்மை அளிப்பாயாக" காளிதாசன் அம்பிகையை "அக்ஷர சுந்தரி" என்றே வருணிக்கிறார்.

## 51ன் மகிமை

இந்த 51 என்ற எண்ணிக்கை 51 அக்ஷரங்களைக் குறிக்கிறது. சப்த வடிவில் 51 அட்சரங்களும் 51 பீடங்களே. காளிதாசன் அம்பிகையின் முழு உருவத்தையும் "அ" முல் "க்ஷ" வரை 51 அட்சரங்களாக வருளித்திருக்கிறார். வழிபாடு ஆரம்பிக்குமுன் சில நியாஸங்கள் உண்டு. அதில் முக்கியமானது மாத்ருகா நியாஸம் அதாவது 51 அட்சரங்களையும் தன் உடலில் பல பாகங்களில் ஆவிர்ப்பவித்துக் கொள்வது. இதனால் அட்சர ரூபமாக உள்ள அம்பிகையின் வடிவமாகவே வழிபடுபவர் ஆகிவிடுகிறார்.

அருணகிரிநாதர் இந்த 51 அட்சர மகிமையை உணர்ந்து 51 பாடல்களில் கந்தரனுபூதியை இயற்றியிருக்கிறார். இந்த 51 அட்சரங்கள் நம் உடலில் பின் கண்ட இடங்களில் உள்ளன.

மூலாதாரத்தில் 4 எழுத்துக்கள், அநாகதத்தில் 12 எழுத்துக்கள், சுவாதிஷ்டானத்தில் 6 எழுத்துக்கள், விகத்தியில் 16 எழுத்துக்கள், மணிபூரகத்தில் 10 எழுத்துக்கள், ஆக்ஞையில் 2 எழுத்துக்கள், ("ள" மாத்ருகா நியாஸத்தில் சேர்க்கப்படுவதில்லை). ஆக 51 எழுத்துக்கள் "அகர முதலெனவுரை செய் ஐம்பத்தோரட்சரமும்" என்று திருப்புகழ் கூறுகிறது.

## தேவி ஸூக்தம்

பிரும்ம வித்யா ரூபிணியான பராசக்தி வாக்குக்கு அதிஷ்டானள தேவதை ரிக் வேதத்தில் 10-வது மண்டலம் 125-ஆவது ஸூக்தமாக அமைந்துள்ளது தேவி ஸூக்தம். இதற்கு சச்சிதானந்தமான பரமாத்மாவே தேவதை. இது 8 ரிக்களைக் கொண்டது. இதற்கு "அம்ப்ருண் ஸூக்தம்" என்றும், "வாக் ஸூக்தம்" என்றும் பெயர்அம்ருணர் என்ற ரிஷியின் பெண்ணான "வாக்" என்ற பிரும்ம விதூஷி பார்த்த மந்திரமானதால் இப்பெயர்கள் வந்தன.

இதில் அம்பிகையே கூறுவதாவது: "ஆகாசத்தையும் பூமியையும் நானே அந்தர்யாமியாக இருந்து தாங்குகிறேன். அந்த ஆகாசத்தை நான் அதிஷ்டானமான பிரஹ்மத்தின் மேல் படைக்கிறேன். அதிலேயே நூலின் துணி நீற்பது போல சமஸ்த சிருஷ்டிகளும் நிற்கின்றன. எல்லாவற்றுக்கும் ஆதி காரணமான பரப் பிரஹ்மத்தினிடத்தில் புத்தி விருத்திகளுக்கிடையே காணப்படும் சுத்த சைதன்யமே என் உற்பத்தி ஸ்நானம். ஆகையால் எல்லா பிராணிகளுக்குள்ளும் நுழைந்து பல வடிவங்களாக நிற்கிறேன். சமஸ்த ஜகத்தையும் ஆத்மாவாக இருந்து நடக்கிறேன்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித செயலும் இல்லாமல் ஆனந்த மயமாக இருப்பது பரம்பொருள். அதற்குத் தன் பெருமையை உணர்த்திப் பிரபஞ்ச லீலையைச் செய்ய வைப்பவள் அன்னை பராசக்தி. அவளை ஒன்பது விதமான உணர்ச்சி பாவங்களில் நவரஸ நாயகியாகப் பக்தர்கள் அனுபவித்திருக்கின்றனர்.

**சாந்தம்:** சிவபெருமானைக் குறித்து தேவி தவம் இருந்தாள். தவம் என்றாலே ஒரே சூடு, உஷ்ணம். அதுவும் பஞ்சாக்னி மத்தியில் தேவி தவம் செய்கிறாள். இருந்தாலும் அவள் மனம் சாந்தியிலும் அமைதியிலுமே ஈடுபட்டுள்ளது. அம்பிகையில்லாத சிவனோ சில முத்திரையுடன் தெற்கு நோக்கி மௌத் தவம் இருக்கிறார்.அவரிடமும் ஒரே சாந்தம் சிவமும் சக்தியும் தனித் தனியாகப் பிரிந்த ரீதியில் சாந்தமே உருவமாக விளங்குகின்றனர்.

**பீபஸ்தம்:** இப்படிக் கடும் தவம் புரியும் அம்பிகையிடம் சிவபெருமான் கிழக்கோலத்தடன் வந்து, "அந்த சுடலையாண்டியைக் குறித்து ஏனம்மா தவம் செய்கிறாய். அதற்குப் பதிலாக என்னை மணக்கலாமே!" என்கிறார். இந்த சிவ நிந்தையைக் கேட்டு தேவி அருவருப்பு அடைகிறாள்.

**வீரம்:** மதுரை அரசாளும் மகாராணியாக விளங்குகிறாள் தேவி. பல திசைகளிலும் திக்விஜயம் செய்து அத்தேச மன்னர்களை எல்லாம் வென்று வீராங்கனையாக விளங்குகிறாள். இப்பேர்ப்பட்ட வீராங்கனை இமயம் சென்று சிவபெருமானைக் கண்டபோது மன்மதனால் தோற்கடிக்கப்படுகிறாள். மன்மதன் பாணத்திற்காளான இந்த அம்பிகை வெடகித் தலைகுனிகிறாள்.

**பயம்:** பரமசிவ பக்தையான அம்பிகைக்கே சிவனின் கோலத்தைக் கண்டு முதலில் அச்சம் எழுந்ததாம். மீனாக்ஷிதான் இப்படி என்றால் அவள் அன்னை காஞ்சனமாலை தன் மாப்பிள்ளை கோலத்தைக் கண்டு (உடல் முழுவதும் சாம்பல், யானைத்தோல் உடை, கழுத்தில் பாம்பு) இடிந்துபோய் விடுகிறாள். கன்னிகாதானம் செய்துதர வந்த மகாவிஷ்ணு இதை அறிந்து சிவபெருமானுக்கு ஜாடை காட்ட இறைவன் கல்யாண சுந்தரனாகக் காட்சியளிக்கிறார்.

**கோபம்:** யாரைக்குறித்து பதியாக அடையவேண்டும் என்று தேவி விரும்பினாளோ அவரையே கணவனாகப் பெற்றாள். அப்பேர்ப்பட்டவரை இன்னொருத்திக்கு விட்டுவிட எந்த மனைவிதான் உடன்படுவாள்? அதுவும் கணவர் ஒரு பெண்ணை தலையில் வேறு தூக்கி வைத்துக் கொண்டால்! பகீரதனுக்காகச் சிவபெருமான் கங்கையைத் தாங்கித் தலையில் வைத்துக்கொண்டதைக் கண்டு தேவிக்கு ஆறாத கோபம் ஏற்பட்டது.

**சிருங்காரம்:** சுடலையாண்டியைக் கலியாண சுந்தரனாக்கிய தேவி இறைவனையே சொக்கவைத்து காமேசுவரனாக ஆகிவிட்டாள், அவர் உடலில் பாதியைப் பெற்றதுமல்லாமல் அவர் வெள்ளை நிறத்தையும் தன் சிவப்பு நிறத்தால் மாற்றி ஒரே அருண நிறமாக ஆக்கிவிட்டாள். மனைவிக்குள் அடங்கிய கணவனாக ஆக்கியது அம்பிகையின் சிருங்கார சக்தியே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆச்சர்யம்:** கணவன் மனைவி ஊடல் நீடிக்குமா? பாற்கடலே விஷம். அக்கொடிய விஷத்தை சிவபெருமான் விழுங்கிவிட்டார். இதைக் கண்டு தேவி ஆச்சரியமடைந்தாள். அவள் மாங்கல்ய பலம் தானே அவரைக் காப்பாற்றியது.

**ஹாஸ்யம்:** மணமான தம்பதிகளுக்கு குழந்தைகள் பிறந்துவிட்டன. விநாயகரும், முருகனும், ஒரு பழத்திற்காக போட்டி தொந்தியைத் தூக்கமாட்டாமல் கணபதி, அப்பா, அம்மாவை வலம் வந்தது கண்டு தேவிக்கே சிரிப்பு தாங்க முடியவில்லை.

**கருணை:** அம்பிகையின் குடும்பம் கணபதியும், முருகனும் மட்டுமா? இந்த உலகமும் அதிலுள்ள ஜீவராசிகளும் அவள் குடும்பமல்லவா. ஆகவே கருணையுடன் அன்னை பராசக்தி எல்லோருக்கும் அருள் பாலிக்கிறாள். அன்பர்களை அறக் கருணையால் அனுக்ரஹித்து கொடியவர்களை மறக்கருணையால் திருத்தி பாலிக்கிறாள்.

**பராரூபம்:** வாஸனா வடிவமான ஆத்மாவின் பிரம்ம சைதன்யம் அவளது பராரூபமாகும். இந்த பராஸ்வரூபம் கோடி கோடி ஜன்மாக்களில் செய்த புண்ணிய வசத்தால் யாரோ சிலர் பரிசுத்த மனோபாவத்தால் அறிகிறார்கள். இந்த பராஸ்வரூபத்தை உபாசிப்பதற்கு முதலில் மந்திரம், சக்ரம், பூஜை இம்மூன்றும் அடிப்படையாகும்.

தேவியை சங்கீத ரஸிகை என்றும் கான வோலூபா என்றும் லலிதா சகஸ்ரநாமத்தில் வருணித்திருகிறார்கள். அம்பிகையின் குரலினிமை வீணை ஒலியைவிட இனிமை என்று கூறப்பட்டுள்ளது. அம்பிகையைப் பற்றிச் சொல்லும் போது "கதி கமக கீதக நிபுனே" என்பதாக உள்ளது. சங்கீதத்தில் மார்க்கம், தேசி என இரு கதிகள் உண்டு. "கமகம்" என்பது ஸ்தாயி ஸ்வரம் "கீதம்" என்பது கீர்த்தனத்தைத் பாடுவது. கதி கமக கீதம் இம்மூன்றும் தேவியினுடைய கழுத்தில் மூன்று ரேகைகளாக இருக்கின்றனவாம்.

## வேதமும் உபநிஷத்துக்களும் அவளே

அம்பிகை எல்லா உபநிஷத்துக்களாலும் அறியப்பட்டவள் என்பதை "சர்வவேதாந்த ஸம்வேத்யா" என்ற நாமம் குறிப்பிடுகிறது. வேதங்களுக்கு ஞான காண்டம் முடிவானதாலும் அவைகள் வேதாந்தங்கள் வேத சிரோபாகங்கள் என்று சொல்லப்படும். அவைகளில் அம்பிகையின் பரப்பிரும்ம ஸ்வரூபம் பதித்திருப்பதால் இப்பெயர்.

**ஏஷா த்ரிசக்கிருத்திஷ்டா தவஸித்தாந்த காமினி**
**ஏஷா ஞானாத்மிகா சக்தி ஸர்வ வேதாந்த காமினீ**

**- வராஹ புராணம்**

நூற்றெட்டு உபநிஷத்துக்களில் தேவி விஷயமாக உள்ளது நான்கு. இந்த 108 - ன் சேராதது ஸ்ரீ சக்திரோபநிஷத். தேவியை "அஜ்ஞேயா", "அனந்தா", "அஜா", "ஏகா", "நைகா" என்று "தேவி உபநிஷத்" கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரும்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியாதவள் "அஜ்ஞேயா", அந்தம் அல்லது முடிவேயில்லதவள் "அனந்தா", யாராலும் கிரகிக்க முடியாதவள் "அலட்சியா", ஆதியுமில்லாதவள் "அஜா", எங்கும் ஒருவளாகவே இருப்பவள் "ஏகா", ஒருவனே பல ரூபங்களில் இருப்பவள் "னைகா".

**திரிபிரோபநிஷத்:** (ருக் வேதம்) திரிபுர தேவியின் உபநிஷத்தாகிய ஓங்காரப் பொருளை விளக்கும் மகா வாக்கியங்களால் கட்டிக் காட்டப்படும் நிலையைப் போற்றுகிறது.

**பஹ்ருவோபநிஷத்:** (ருக்வேதம்) அம்பிகை சகல வேத ஸ்வரூபமாக இருப்பதுடன் அவைகளால் ஸ்தோத்திரம் செய்யப்படுவதால் "பஹ்ருல்வா" என்றழைக்கப்படுகிறாள். மகாதேவியான சித்சக்தியே இருப்பிரும்மாண்டத்தை சிருஷ்டித்தாள். அவளிடமிருந்தே சகல தேவதைகளும் உண்டானார்கள்.

**பாவனோபநிஷத்:** (அர்வண வேதம்) இதில் அம்பிகையை பாவனையாக வழிபடுவது விளக்கப்படுகிறது.

அம்பிகையே துணை என்று அபிராமி பட்டர் கூறுகிறார். துணை என்று ஒன்று உயிர்களுக்கு இருக்குமேயானால் அது அம்பிகையே.

நமக்கு துணைவரும் பொருட்டு நாம் தொழுகின்ற தெய்வம் கூட அவள்தான். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பார்கள். அப்படி நம்மால் ஒன்றுமே செய்ய முடியாமல் திகைக்கும் நிலையில் நாம் அவளை எண்ணித் தொழவும் அவள் நம் பொருட்டு ஓடி வரவும் ஆகிய அன்புக் கருணைக்கு அவள் அன்புத் தாயாகவும் இருக்க வேண்டும். "தாய் ஒக்கும் அன்பின்" என்பார் கம்பர், அத்தகைய தாயும் கூட அவள்தான். துறை மங்களம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவது போன்று "கருதரிய உலமு பல அண்டம் கருப்பமில் என்ற கன்னி" அவள்.

அவளே துணையும், தொழும் தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின் பணையும் கொழுந்தும் பதி கொண்ட வேரும். வேதங்கள் என்னும் தெய்வீக விருக்ஷங்களில் பிணைத்துக் கிளைகளாகப் பரவியிருக்கும் வேதசாகைகளாகவும் அதன் உச்சியில் துளிர் விட்டுக் கொழுந்துகளாக இருக்கும் உபநிஷத்தங்களாகவும் இவை அனைத்திற்கும் ஆதாரமான வேர் ஆகவும் அதாவது மூலப் பிரணவமாகவும் விளங்குபவள் அம்பிகை.

அம்பிகை திரிபுரசுந்தர்யைப் பற்றிய இதிகாசம் திரிபுரா ரகஸ்யம் *ஹாரிதாயணர் என்ற ஸுமேதஸ் இதை எழுதியதால் "ஹாரிதாயண சம்ஹிதை" எனவும் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சார்ய காண்டம், மகாத்மிய காண்டம், ஞான காண்டம் என்ற மூன்று பாகமுள்ளது. மொத்தம் 144 அத்தியாயங்கள். இதை ஹாரிதாயணர் ஸ்ரீ பாலாபரமேஸ்வரியின் ஆக்ஞைப்படி மதுரை மீனாக்ஷி அம்மன் சந்நிதியில் ஒரு நாளைக்கு 4 அத்தியாயங்களாக 36 நாட்களில் எழுதி முடித்தாக அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த ஹாரிதாயணர் (ஸுதேஸ்) பிருகு முனிவரின் புதல்வர். இவர் பரசுராமரைக் குருவாக அடைந்து அவரிடம் ஸ்ரீ பாலா மஹா மந்திரம் உபதேசம் பெற்றார். பின்னர் ஸ்ரீ சைலம் பிரமராம்பிகையின் அருள் பெற்ற இக்கிரந்தத்தை இயற்றினார்.

பொதுவாக இது தேவியின் பெருமையை விளக்குகிறது. என்றாலும் மற்ற புராண இதிஹாசங்களில் காணாத பல அரிய விஷயங்கள் இதிலிருக்கின்றன.

மன்மதனது பிறவி. திக்விஜயம், பூமியிலுள்ள அரசனுடன் ஆயுதமெடுத்துப் போர் புரிந்தது. அவனுக்கு ஸஹாயமாக வந்த இந்திராதிகளை அரசன் சிவ வரத்தால் சிறைப்படுத்தி காமனை மூர்சிக்கச் செய்வது, காமனது தாயான லக்ஷ்மி வருந்தி புத்திரனுக்காகப் பரிந்து பார்வதியுடன் ஆயுதமெடுத்துப் போர் புரிவது. ஒருவருக்கொருவர் சாபமளித்தல். சாப விமோசனம் முதலிய கதை மிக விஸ்தாரமாகக் கூறப்படுகிறது.

சரிதத்தைக் ஊனக் கண்ணாலும், ஞானக் கண்ணாலும் கண்டும், கேட்டும் ஹாரிதாயணர் எழுதினார்.

இதில் சார்யா காண்டமென்பது அச்சுக்கு வராமலே போய்விட்டது. ஞானக் காண்டத்தைக் காசியில் ஸ்ரீ கோபிநாத் கவிராஜர் என்ற பண்டிதர் டீகையுடன் நான்கு பாகமாக வெகு காலத்திற்கு முன் வெளியிட்டார். அது கிடைப்பதும் துர்லாபமாக இருக்கிறது. மஹாத்மிக காண்டம் தென் நாட்டில் அதிக பிரசாரமடையவில்லை. இந்த நூலும் காசியிலுள்ள சௌகாப்பாபிரஸ் என்ற இடத்தில் பண்டித ஸ்ரீ முகுந்தலால் சாஸ்திரியால் 20 ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டது. அது காசியில் தான் கிடைக்கும்.

ஞான காண்டம் முப்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் வசன நடையில் அச்சிடப்பட்டது. வேதாந்த விசாரத்தி ஈடுபட்ட ஆலந்தூர் ஸ்ரீ கோவிந்தசாமி ரெட்டியார் இதை வெளியிட்டார். அது ஞான வாஸிஷ்டம் போல் வேதாந்த கதை நிறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டலினி சக்தியும் அவளே

சிவார்க்க மண்டலம் பித்வா த்ராவயந் திந்து மண்டலம்
குலயோஷித் குலம் த்யக்த்வா பாம் வர்ஷண மோதிஸா!

- பைரவ யாமளம்

பரதேவதையின் அதிஷ்டான பீடங்கள் அகத்தும் உண்டு. புறத்தும் உண்டு. புறத்தேயுள்ளதுதான் 51 சக்தி பீடங்கள். அகத்தில் ஆராதிக்கும் சக்தி பீடங்கள் முக்கியமானவை நான்கு. அவை மூலதாரத்தில் காமகிரி பீடம், அனாகதத்தில் பூர்ணகிரி பீடம், விசுத்தியில் ஜலாந்தர பீடம், ஆக்ஞையில் உட்டியான பீடம், இந்நான்கு பீடங்களிலும் அம்பிகை பராபச்யந்தி மத்யமாவைகரி என்ற வடிவில் ஆராதிக்கப்படுபவள்.

"நம் முதுகெலும்புக்குத் கீழேயிருந்து சிரசு உச்சிக்குப் போக யோக சாஸ்திரப்படி குணடலினி சக்தியை எழுப்பிக் கொண்டு போகிறபோது அம்பாள் தாமரைத் தண்டை உடைத்தால் வருகிற நூலிழை மாதிரி அத்தனை மெல்லியதாக மேலெழும்பிப் போகிறாள்" என்று சொல்லியிருக்கிறது. இதுவும் அவளுடைய சூக்ஷ்ம ரூபங்களில் ஒன்று. சூக்ஷ்மமாக இருந்தாலும் அதுவே கோடி சூர்ய பிரகாசமாகவும் இருக்கும் அதே சமயத்தில் உஷ்ணம் துளிக்கூட இல்லாமல் கோடி சந்திரன் மாதிரி குளிர்ச்சியாகவும் இருக்கும்.

மூலாதாரச் சக்கரத்தில் குண்டலினி சக்தியாக உள்ள பரமேஸ்வரி ஹ்ருதய மண்டலத்தைப் போதித்து விட்டுப் பிரும்ம ரந்த்திரத்திலுள்ள சந்திர மண்டலத்தையும் மறைத்துக் கொண்டு ஸுக்ஷும்நா மார்க்கத்தை விட்டுவிட்டு அந்த சந்திர மண்டலத்திலேயே தான் இருந்து கொண்டு 72000 நாடிகளிலும் அமிருதத்தை வருஷித்து விட்டு மறுபடியும் தன் இருப்பிடமான மூலாதாரத்திற்கு வந்து குண்டலினி ரூபமாக யோக நித்திரை செய்கிறாள்.

இச்சரீரத்தில் சுவாதிஷ்டானத்தில் அக்னி மண்டலமும், இருதயத்தில் சூர்ம மண்டலமும், பிரும்ம ரத்தத்தில் சந்திர மண்டலமும் இருந்து வருகின்றன. சுஷும்மான நாடி என்பது பாதரசத்தினால் ஏற்பட்ட ஒரு குழாய் மாதிரி இருக்கிறது. சந்திர மண்டலம் அமிர்த மயம், கீழுள்ள நாடிகளில் சம்பந்தப்பட்டாலும் இருதயத்திலுள்ள சூர்ய மண்டலத்தில் அவை காய்ந்து விடுகின்றன. 72000 நாடிகளுக்கு அம்ருத சம்பந்தம் இருந்தால் இந்த ஜீவனுக்கு சாவே கிடையாது. சூர்ய மண்டலம் சிவஸ்தானம், சந்திர மண்டலம் சக்தி ஸ்தானம் சிவம் தபிக்கச் செய்பவர். சக்தியோ ரக்ஷிக்கின்ற தாயார். மூலாதாரத்திலுள்ள அம்பிகையை மேலெழச் செய்து விட்டால் அவள் சகஸ்ராரம் போய் அமிருதத்தை வருஷிக்கச் செய்வாள். அகஸ்தியார், ஆஞ்சநேயர், மார்க்கண்டேயர் இப்பிரயோகத்தை அனுஷ்டித்துத்தான் சிரஞ்சீவியாக இருந்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரத்திலிருந்து படிப்படியாக தேவியை ஆதாரங்களிலும் மானஸீகமாக தியானித்து பூஜிப்பது சமயாசாரம். இதில் அம்பிகை பிரியமுள்ளவள் என்பதை "ஸமயாசார தத்பராயை" என்ற நாமம் விளக்குகிறது.

"மூலாதாரைக நிலயாயை" என்ற நாமத்தினால் மூலாதாரத்தில் (நான்கிதழ் கமலத்தின் நடுவிலுள்ள) குல குண்டலம் என்ற இடத்தை வாயால் கௌவிக் கொண்டு குண்டலினி சக்தி உறைகிறாள் என்று அர்த்தம்.

மூலாதார சக்ரத்திற்கு சூலம் என்ற பெயரும் உண்டு இதில் தாமரைத் தண்டுக்குள் இருக்கும் நூல் போல அதி ஸுக்ஷ்மமாக சரீரத்தோடு அம்பாள் வசித்து வருகிறாள் என்பது சாஸ்திர பிரசித்தமானது. இவள் ஸர்ப்பம் போல குண்டலம் போட்டுக் கொண்டு இருப்பதால் குண்டலினி சக்தி எனப்படுகிறாள்.

தேவி தன் நாயகனுடன் இணைந்து மாற்றமற்ற ஒரே நிலையில் ஆறு சக்கரங்கள் மூலம் புரியும் அற்புதச் செயல்களைக் ஸௌந்தர்ய லஹரியில் ஆதி சங்கரர் மிக அழகாகச் சொல்கிறார். ஆக்ஞா சக்ரத்தில் மனமாகவும், விசுத்தியில் ஆகாயமாகவும், அனாஹதத்தில் வாயுவாகவும், ஸ்வாதிஷ்டானத்தில் அக்னியாகவும், மணிபூரகத்தில் நீராகவும், மூலாதாரத்தில் பிருத்வியாகவும் தேவி விளங்குவதை அவர் வருணிக்கிறார்.

ஸுமேரு மத்ய சிருங்கஸதா என்பது அம்பிகைக்கு ஒரு நாமம். யோக சாதனத்தின் உச்ச நிலையை இத் திருநாமம் குறிப்பிடுகிறது. மேரு மலை என்பது எங்கேயோ இருப்பதில்லை. மனித உடம்பிலும் உள்ளது. மூலாதாரத்தினின்று சஹஸ்ரராம் வரையிலுள்ள சுழுமுனை நாடியே மேரு பர்வதம் எனப்படுகிறது. அப்பர்வதத்தின் உச்சியே அம்பிகை வீற்றிருக்கிறாள். மேரு மலையே சுமேரு என்பதால் அதில் நலனும் இனிமையும் நிறைந்திருக்கின்றன என்று பொருள்படுகிறது.

## இயற்கையும் அவளே

நாம் பார்க்கின்ற ரூபம் எல்லாம் அவள் செய்ததுதான். இருந்தாலும் விசேஷ ரூபங்களில் தியானித்தால் தான் நம் மனதுலயிக்கிறது. எல்லா ரூபத்திற்கும் இடம் தருகிற அகண்ட ஸ்வரூபம் ஆகாயமாக இருக்கிறவளே பிராண சக்தியாக, மூச்சுக் காற்றாக இருக்கிறாள். நம் உடலிலுள்ள குண்டலினி சக்தி அவளே. அக்னி, ஜலம், காற்று, பூமி எல்லாமே அவள் வடிவம்தான். இதை எல்லாம் அனுபவிக்கிற நம் மனதும் அவள்தான். "மனஸ்த்வம்" என்ற ஸ்லோகத்தில் ஆதிசங்கரர் இதை எல்லாம் சொல்கிறார்.

இன்னொரு ஸ்லோகத்தில் இரவும், பகலும் அம்பாளின் ரூபம் தான் என்று ஆசார்யர் சொல்கிறார். தாயார் குழந்தைக்குத் தன் இரண்டு ஸ்தானங்களிலிருந்து பால் கொடுக்கிற மாதிரி சூரியன், சந்திரன் என்கிற இரண்டால் லோகத்திற்கு உணவு அளிக்கிறாள் என்கிறார். சூரியனிடமிருந்துதான் தாவரப் பிரபஞ்சத்தில் குளோரபில் உண்டாகிறது. தாவரப் பொருள்களை அருந்தியே நாம் எல்லோரும் உயிர் வாழ்கிறோம். சூரியன் தாவரங்களை வளர்க்கிற மாதிரி சந்திரன் மூலிகைகளை வளர்க்கிறான். அம்பிகை சூரிய வெப்பத்தாலும் சந்திரனின் நிலவாலும் உலகம் முழுவதற்கும் தன் பாலைப் பொழிகிறாள் என்று இதையே ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமஸ்காரம்

ஒருவருக்கொருவர் வந்தனம் தெரிவிக்கவும், வரவேற்கவும், எவ்வளவோ முறைகள் பல்வேறு நாட்டினரால் கையாளப்பட்டு வருகின்றன. ஒருவரை மற்றொருவர் சந்தித்தால் ஏற்படும் மகிழ்ச்சியை வெளிக்காட்டுவதே கும்பிடு போடுவது, கை குலுக்குவது, இவர்களின் அர்த்தம் நமஸ்காரம், வணக்கம், நமஸ்தே என்று சொல்லி கும்பிடுவது நம்மிடையே உள்ள சர்வ சாதாரண வழக்கம். சாஸ்டாங்கமாக தண்டனிட்டு வணங்குவது நமது சம்பிரதாயம். இவைகளில் எல்லாம் பல தத்துவார்த்தங்கள் உண்டு.

இரண்டு கைகளையும் சேர்த்து குவித்து வணக்கம் செலுத்துவதானால் "இரண்டு என்பதே இல்லை" என்கிற உண்மை விளங்குகிறது. இப்படி இரண்டு கைகளையும் சேர்த்துக் குவிப்பது இதயத்தின் முன்போ அல்லது நெற்றிக்கு நேரிலோ அல்லது தலைக்கு மேலேயோதான் இந்த மூன்று இடங்களும் தேகத்தின் ஆத்ம சைதன்யம் ஸ்புரிக்கும் இடங்கள்.

இதயத்தின் கட்டை விரல் பரிமாணத்தில் ஆத்மா விளக்குகிறது. என்று சொல்வர். நெற்றியில் இரு புருவங்களுக்கிடையே 'ஆக்ஞை' சக்கரம் உள்ளது. யோக சாஸ்திரத்தில் மனதை ஒருமை நிலைப்படுத்த இது கேந்திரஸ்தானமாகும். தலைக்குமேல் சகஸ்ராரம் என்ற புனிதமான இடம் மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி இந்த சகஸ்ராரத்திற்கு கொண்டு வருவது பேரின்பம் அடையும் நிலை.

இரண்டு கைகளிலுமுள்ள பத்து விரல்கள் நாம் ஜபிக்க வேண்டிய பத்து இந்திரியங்களையும் (ஞானேந்திரியம் 5, கண், மூக்கு, காது போன்றவை. கன்மேந்திரியங்கள் 5, கை, கால், உபஸ்தம் போன்றவை சுட்டிக் காட்டுகின்றன.


## சாஸ்டாங்க நமஸ்காரம்

தேகத்தைக் கீழே கிடத்தி வணக்கம் செலுத்துவதில் ஜடமான இந்த தேகம் மண்ணோடு மண்ணாக போகப் போகிறது என்பதை உணர்த்துகிறது. இப்படி வணங்குபவர், வணக்கம் பெறுபவர் இவருடைய தேகங்களிலும் உறையும் உண்மைப் பொருள் ஒன்றே என்ற பாவனையை விளக்கும் அடையாளம் இது. மூத்தோர்களுக்கும், கடவுளுக்கும் தரை மீது பணிந்து வணங்குகிறோம். எல்லா அங்கங்களும் தரையில் படுவதால் சாஷ்டாங்க நமஸ்காரம் என்று இது வழங்கப்படுகிறது.


ஆண்கள் சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பது போல பெண்கள் நமஸ்கரிக்க கூடாது. இதற்கு காரணம் உண்டு. மணியின் நாக்கு, சங்கின் அடிப்புறம் ஸ்திரீகளின் ஸ்தனங்கள். இவை பூமியில் படலாகாது என்பது சாஸ்திரம். மணியைத்தட்டில் தான் வைக்க வேண்டும். சங்கை அதற்கான பீடத்தில் தான் வைக்க வேண்டும். ஆண், பெண் அடிப்படை அமைப்பும் இந்த நமஸ்கார வித்தியாசத்தின் காரணமாகும். நாதம், விந்து இண்டும் சேர்ந்ததே சிருஷ்டி. விந்துவின் உருவம் சுழி, நாதத்தின் உருவம் நீண்ட கோடு. இந்த சுழியே பெண். சுழியால் குறிக்கப்படும் பெண் அச்சுழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனர்வாழ்வு அமைச்சர் கௌரவ Dr. ஜயலத் ஜெயவர்தனா. நவாலியூர் பிரதிஷ்டாசிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் ஆகியோருக்கு ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் பொன்னாடை போர்த்தி. பரிவட்டங்கட்டி கௌரவிக்கிறார்.




சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு சுவிஸ் மாநகரில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது. (1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபல பாடகர் **T.M.** சௌந்தரராஜன் பிரபல பாடகி **P.** சுசீலா ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் **T.** மகேந்திரன். **T.M.S.** பால்ராஜ் செல்வி **S.** ஸ்ரீ வரலக்ஷ்மி ஆகியோர் (1993)



கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் - ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களும் (2002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் தலைமையில் யாழ்ப்பாணம் - நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற ஆன்மீகப் பெருவிழாவில் சிறப்புப் பரிசில்கள் பெற்ற மாணவ மாணவிகளும். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. ப. கோபாலகிருஷ்ண ஐயர் நல்லைஆதீன ஸ்வாமிகள். சிவ. நித்தியானந்தக் குருக்கள். (2002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீலகிரி மாவட்டம் (ஊட்டி) கூடலூரில் கேரள பாரம்பரிய வைத்தியர். வைத்தியகலாபூஷன் திரு. பாபுராஜ் அவர்களுக்கு சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஞாபகார்த்த சின்னம் வழங்குகிறார் (15-02-2004)



சுவிஸ்ட்லாந்து பாசல் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் ஆன்மீக உரை ஆற்றிய இந்துமத குருபீடாதிபதி அவர்களுக்கு ஆலய தர்மகர்த்தா பொன் முடிப்பு வழங்கி ஆசி பெறுகிறார் (1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே நமஸ்கரிப்பது பொருத்தம் தானே. இக்கோடே ஆண். இந்த இரண்டும் சேருவதே சிவசக்தி ஐக்கியம். சுழியும் கோடும் சேருவதே பிள்ளையார் சுழி. இந்த ஐக்கியத்தைத்தான் அருணகிரிநாதர் 'நாதவிந்து கலாநிதி நாமே நம' என்று பாடுகிறார்.

ஆண்கள் நமஸ்காரம் செய்யும் போது 8 அங்கங்களும், பெண்கள் நமஸ்காரம் செய்யும் போது 5 அங்கங்களும் பூமியில் படவேண்டும்.

ஆண்கள் நமஸ்கரிக்கையில் நெற்றி, நாசி, இரண்டு தோள், இரண்டு கைகள், இரு முட்டிகள் பூமியில் படவேண்டும். பெண்கள் நமஸ்கரிக்கையில் நெற்றி, இரண்டு கைகள், இரண்டு முழங்கால்கள் பூமியில் படவேண்டும்.

பெண் என்பவள் சக்தி, அவள் சிவத்தின் அக்ஷரமான ஐந்து அங்கமான பூமியில் பதிக்க வேண்டும். அப்போது அவளே சிவசக்தியாகிறாள். பூமிதேவியின் அருளைப்பெறுகிறாள்.

ஆண் சிவம், அவள் தேவி அம்சமான விஷ்ணுவின் அஷ்ட அக்ஷரமான எட்டு அங்கங்களை பூமியில் பதிக்க வேண்டும். அப்போது அர்த்தநாரி தன்மை ஏற்பட்டு பூமிதேவியின் அருளைப் பெறுகிறான்.

கோவில்களிலும் கொடி மரத்திற்கு அருகில் தான் நமஸ்காரம் செய்ய வேண்டும் என்ற நியதி இருக்கிறது.

சம வயதினருக்கும் மற்றவர்களுக்கும் கை கூப்பி அஞ்சலி செய்கிறோம். நமஸ்காரம் செய்யும் போது வணங்கப்படும் பெரியவர் முருகா என்றும், ஐயப்பா, என்றும் நாராயணா என்றும் சொல்வதைக் கேட்டிருக்கலாம். இந்த நமஸ்காரத்தை அவர் இறைவனுக்கு அர்ப்பணித்து விடுகிறார் என்பதே இதன் பொருள்.

(ம- எனக்கு (நான்) ந - இல்லை என்பதே "நம" என்பதன் பொருள் அதாவது: நமஸ்காரம் என்பதற்கு அர்த்தமே நான் என்கிற மமதையை ஒழித்துவிட்டு வணங்குகிறேன் என்பதாகும்.

## ங போல் வளை

ஔவையார் சுலபமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எப்படி 'ங' போல வளைவது? இதிலுள்ள தத்துவம் வேறு.

ஒருவரை நமஸ்கரிக்கும் முன் முதலில் அவருக்கு நேரே நிற்க வேண்டும். ங விலுள்ள கோடு இதைக் குறிப்பிடுகிறது. பின்னர் அவரைப் பார்த்து இவர் யார், வணங்கத்தகுந்தவரா (வயதிலோ ஞானத்திலோ பெரியவரா என்பதை நிதானிக்க வேண்டும். ங விலுள்ள கோடு இதைக் குறிக்கிறது. வணங்கத் தகுந்தவர்கள் தான் என்ற தீர்மானத்திற்கு வந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும் பார்வை கீழ் நோக்க வேண்டும். ங விலுள்ள மூன்றாவது கோடு பின்னர் உடலை வளைக்க வேண்டும் ங விலுள்ள வளைவு இதைக் குறிப்பிடுகிறது. பின் நெடுஞ்சாண் கிடையாக நமஸ்கரிக்க வேண்டும். ங விலள்ள கீழ்க்கோடு இதைக் குறிப்பிடுகிறது. (ங நமஸ்கரிப்பவருக்கும் நமஸ்கரிக்கப்படுபவருக்குமிடையே ஒரு சாண் இடைவெளி இருக்க வேண்டும் என்பது நெடுஞ்சாண் கிடை வார்த்தையில் உணர்த்தப்படுகிறது.) பின்னர் எழுந்து நிற்க வேண்டும் "ங" விலுள்ள மேல் நோக்கிச் செல்லும் கடைசி கோடு அது.

## தண்டம் சமர்ப்பிப்பது

நமஸ்காரம் செய்வதை தண்டம் சமர்ப்பிப்பது என்பார்கள். தண்டம் என்றால் கழி அல்லது கோல் என்று அர்த்தம். அது தடால் என்று கீழே விழுந்து விடும். அதே போல இந்த சரீரத்தை நம்முடையதல்ல, இறைவனது என்று நினைத்து கீழே போடுவது தான் நமஸ்காரம். உதவாத பொருள் தண்டமாகிவிட்டது என்று சொல்வதுண்டு. அந்த அர்த்தத்தில் இந்த சரீரம் ஒரு தண்டம் (உதவாப் பொருள்) தான் இப்படியான வஸ்துவை தூக்கி நிறுத்தி ஆட்டி வைப்பது இறைவன் திருவருளேயாம்.

காஞ்சி காமக்கோடி பெரியவர்கள் இவ்விஷயமாகக் குறிப்பிடுகையில் கூறியுள்ளதாவது: "நாம் செய்கிறோம்" என்ற எண்ணம் போய் விட்டால் அதுவே சதாகால நமஸ்காரம். அந்த அனுபவம் நமக்கு சித்திக்காத போதிலும் ஈசுவர சந்நிதியிலாவது அப்படி பாவித்து வணங்கித் தரையோடு தரையாகக் கிடக்க வேண்டும். பொறுப்பை உன்னிடம் பூரணமாக ஒப்படைத்து விட்டேன் (அதாவது உன்னைச் சரணாகதி அடைந்து விட்டேன்) என்பதற்கு அடையாளம் சரீரத்தைக் கீழே போடுவது.

**பரமேசுவரன் மீது ஒரு சுலோகம் உண்டு அது,**
**வபு : தப்ராதுர் பாவத்துமிதம் ஜன்ம நிபுரா**
**புராரே நக்வாமி க்வசிதபி பவந்தம் ப்ரணதவாந் -**
**நமஸ் முக்தஸ் ஸம்பிரத்ய ஹமதநுரக் ரேப்ய நதிமாந்**
**கிரீச க்ஷதவ்ய்ம் நதிதம பராதத் வயமபி**

"திரிபுர சம்ஹாரம் செய்த பிரபுவே, நீ என்னுடைய இரு அபராதங்களை க்ஷமிக்க வேண்டும். போன ஜன்மத்தில் நான் உன்னை நமஸ்கரிக்காதது ஓர் அபராதம். வரப்போகிற ஜன்மத்தில் உன்னை நமஸ்கரிக்காமல் இருக்கப்போகிறது இரண்டாவது அபராதம்."

"போன ஜன்மத்தில் நான் உன்னை நமஸ்கரிக்கவில்லை என்பது எப்படி தெரியும் என்கிறாயா? எனக்கு இப்போது ஜன்மம் ஏற்பட்டிருப்பதிலிருந்தே தெரியவில்லையா? போன ஜன்மத்தில் நான் உன்னை நமஸ்கரித்திருந்தால் மோட்சம் கிடைத்திருக்கும். அடுத்த ஜன்மத்தில் ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்கரிக்க மாட்டேன் தெரியுமா? இந்த ஜன்மத்தில் நான் உன்னை நமஸ்கரித்து விட்டேன். எனக்கு அடுத்த ஜன்மம் ஏது?" இதிலிருந்து இறைவனை மனப்பூர்வமாக நமஸ்கரித்துவிட்டால் போதும் என்று ஏற்படுகிறது.

நமஸ்காரம் பெறுபவர்கள் உங்களை யார் என்று தெரிந்து கொண்டு ஆசீர்வாதம் செய்ய வேண்டாமா? தான் இன்னான், இன்ன கோத்திரம், இன்ன ரிஷி பரம்பரை, இன்ன பெயர் என்பதை சொல்ல வேண்டும். அதை கேட்டு அவர்கள் ஆசீர்வதிப்பார்கள்.

எவர் பிரத்தியாவாதனம் என்ற ஆசீர்வாதத்தை அறியமாட்டார்களோ அவர்களையும் மாதர்களையும் தன் பெயரையும் மட்டும் சொல்லி நமஸ்கரிக்க வேண்டும். 'அபிவாதயே" சொல்லும் போது அஸ்மி 'போ' என்று போ சப்தம் முடிவதைக் கவனித்திருக்கலாம். இந்த சப்தம் பெயர்களின் சுயரூபம் என்று ரிஷிகளால் சொல்லப்படுகிறது.


மநுதர்ம சாஸ்திரத்தில் வணங்கிய பின் எந்தெந்த வருணத்தாரை எப்படி விசாரிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிராம்மணனை "குசலமாக இருக்கிறாயா" என்றும் சக்ஷத்திரியனை "நோயற்றிருக்கிறாயா" என்றும் வைசியனை சேஷமமாக இருக்கிறாயா" என்றும் சூத்திரனை "சுகமாக இருக்கிறாயா" என்றும் விசாரிக்க வேண்டுமாம்.

பண்டிட் ஜவஹர்லால் நேருவை ஒருவர் தண்டனிட்டு நமஸ்கரித்தார். அவருக்கு இப்படி வணங்குவது பிடிக்கவில்லை. இப்படி வணங்குவது அடிமை மனப்பான்மை என்பது அவருடைய எண்ணம். பகவான் தான் எஜமானன். அவனுக்கு மற்ற எல்லோருமே அடிமைகள். ஆகவே அடிமை மனப்பான்மை என்பது உண்மைதான். எல்லோரையும் பகவத் ஸ்வரூபமாக நினைத்து இப்படி வணங்கப்படுகிறது என்பது அவரிடம் விளக்கப்பட்டது. அப்படியென்றால் தெய்வங்களுக்கும் மகான்களுக்கும் அப்படி நமஸ்கரித்தால் போதுமே என்றார் நேரு. இதில் அடிமை மனப்பான்மை எதுவும் இல்லை. அகங்கார மகாரம் ஒழிந்த நிலையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வசதிகுறைந்த மாணவ - மாணவிகளுக்கான

# கல்வி மேம்பாட்டு நிதியம்

அன்பான அறிஞர்களே! பெரியோர்களே!

மனித வழ்வில் கல்வி எத்தகைய முக்கியத்துவம் என்பது அனைவரும் அறிந்ததே! அந்த வகையில் பெற்றோர் இல்லாத மாணவர்களுக்கும், வசதி குறைந்த மாணவர்களுக்கும், அவர்களது மேற்படிப்பிற்காக எமது சர்வதேச இந்து மதகுரு பீடம் கல்வி மேம்பாட்டு நிதியம் ஆரம்பித்து கடந்த ஏழு ஆண்டுகளாக வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் பெயரில் வங்கியில் பணம் வைப்புச் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

சுமார் 350 மணவர்களுக்கு நாம் நிதியத்தின் மூலம் நிதி உதவி செய்து வருகிறோம்.

இந்த நல்ல பணிக்கு நல்ல உள்ளம் கொண்ட நீங்களும் எமது நிதியத்துக்கு நிதி உதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பணம் அனுப்ப வேண்டிய முகவரி**

S. I. S. Sivachcharyar
46, 7th Lane,
Colombo-13.

கல்வி மேம்பாட்டு நிதியம்
சர்வதேச இந்துமத குருபீடம்
கொழும்பு-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஜோதி

## வினா - விடை

### - குருஜீ -

1. வினா: இந்து சமயத்தின் பிரிவுகள் எத்தனை? எவை?

விடை:- ஆறுபிரிவுகள் அவையாவன

1. சைவம்
2. வைஷ்ணவம்
3. சாக்தம்
4. காணபத்யம்
5. கௌமாரம்
6. சௌரம்

2. வினா: சைவ சமய குரவர்கள் யாவர்?

விடை:-
1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
2. திருநாவுக்கரசு நாயனார்
3. சுந்தர மூர்த்தி நாயனார்
4. மாணிக்கவாசக ஸ்வாமிகள்

3. வினா: சந்தான குரவர்கள் யாவர்?

விடை:-
1. மெய்கண்டதேவர்
2. அருள்நந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர்
4. உமாபதி சிவாச்சாரியார்

4. வினா: இறைவன் தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து உபதேசம் செய்தபோது எத்தனை பேர் உபதேசத்தைக் கேட்டார்கள்? அவர்கள் யாவர்?

விடை:- நாலு பேர்,

1. சனகர்
2. சனந்தனர்
3. சனாதனர்
4. சனத்குமாரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வினா: நால்வேதங்கள் எவை?

விடை:- 1. இருக்வேதம் 3. சாம வேதம்
2. யசுர் வேதம் 4. அதர்வண வேதம்

6. வினா: நால்வகை புருஷார்தங்கள் எவை?

விடை:- 1. தர்மம் - (அறம்)
2. அர்த்தம் - (பொருள்)
3. காம - (இன்பம்)
4. மோஷம் - (வீடு)

7. வினா: ஞானம் பெற நான்கு மார்க்கங்கள் எவை?

விடை:- 1. கேட்டல் 3. தெளிவு பெறல்
2. சிந்தித்தல் 4. நிலை நிற்றல்

8. வினா: நால்வகை எழுத்துரை எவை?

விடை:- 1. உயிரெழுத்து 3. உயிர்மெய் எழுத்து
2. மெய் எழுத்து 4. ஆய்த எழுத்து

9. வினா: நால்வகைச் சொற்கள் எவை?

விடை:- 1. பெயர்ச்சொல் 3. இடைச் சொல்
2. வினைச் சொல் 4. உரிச்சொல்

10. வினா: அந்தக்கரணங்கள் நான்கும் எவை?

விடை:- 1. மனம் 3. சித்தம்
2. புத்தி 4. அகங்காரம்

11. வினா: பெண்களிடமுள்ள நால்வகை மார்க்கங்கள் எவை?

விடை:- 1. அச்சம் 3. நாணம்
2. மடம் 4. பயிர்ப்பு

12. வினா: இறைவனை அடையும் நால்வகை மார்க்கங்கள் எவை?

விடை:- 1. தாஸமார்க்கம் (சரியை - திருநாவுக்கரசர்)
2. சற்புத்திரமார்க்கம் (கிரியை திருஞானசம்பந்தர்)
3. சக மார்க்கம் - யோகம் - சுந்தரர்)
4. சன்மார்க்கம் - (ஞானம் - மாணிக்கவாசகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. வினா:** திசைகள் நான்கும் எவை?

**விடை:-** 1. கிழக்கு - (இந்திரன்)
2. தெற்கு - (யமன்)
3. மேற்கு - (வருணன்)
4. வடக்கு - (குபேரன்)

**14. வினா:** விநாயகப் பெருமானுக்கு தமிழ்மூதாட்டி ஔவையார் கொடுத்த நான்கும் எவை? கேட்ட மூன்று எவை?

**விடை:-** கொடுத்த நான்கும் பால், தேன், சர்க்கரை, பருப்பு (பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும்)
கேட்ட மூன்று: இயல், இசை, நாடகத்தமிழ்
(சங்கத்தமிழ் மூன்றும் தா)

**15. வினா:** பிரமதேவ தேவனுக்கு எத்தனை முகங்கள்?

**விடை:-** தக்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோதம் என்ற நான்கு முகங்கள் (நான்முகம் - பிரமா)

**16. வினா:** பன்னிரு ஆழ்வார்கள் பெயரென்ன?

**விடை:-**

1. பொய்கை ஆழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசை ஆழ்வார்
5. நம்மாழ்வார்
6. குலசேகர ஆழ்வார்
7. பெரியாழ்வார்
8. ஆண்டாள் நாச்சியார்
9. தொண்டரடிப் பொடியாழ்வார்
10. திருப்பாணாழ்வார்
11. திருமங்கையாழ்வார்
12. மதுரகவி ஆழ்வார்.

**17. வினா:** பன்னிரு ராசிகளும் எவை?

**விடை:-**

1. மேடம்
2. இடபம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுஷ்
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வினா: பன்னிரு ஆதித்யர்களின் பெயரென்ன?

விடை:-

| | |
|---|---|
| 1. வைகர்த்தனன் | 7. லோகசாக்ஷி |
| 2. விவஸ்வான் | 8. த்ரிவிக்ரமன் |
| 3. மார்த்தாண்டவன் | 9. ஆதித்யன் |
| 4. பாஸ்கரன் | 10. சூரியன் |
| 5. ரவி | 11. அம்சுமாலினி |
| 6. லோகப்பிரகாசன் | 12. திவாகரன் |

19. வினா: பன்னிரு ஜோதிர்லிங்கங்களின் பெயர்கள் எவை?

விடை:- 1. சோமநாதர் - (சௌராஷ்ட தேசம்)

2. மல்லிகார்ஜுனர் - (ஸ்ரீ சைலம்)

3. மகாகாளேஸ்வரர் - (உஜ்ஜயினி நகரம்)

4. ஓம் காரேஸ்வரர் (நர்மதா நதிக்கரை)

5. வைத்தியநாதர் - (ஸ்ரீ கைலாசம்)

6. நாகேஸ்வரர் - (தாருகாவனம்)

7. காசிவிஸ்வநாதர் - (உத்தர பிரதேசம் - காசி)

8. பீமசங்கரர் - (மஹாராஷ்டா)

9. ராமேஸ்வரர் - (தமிழ்நாடு - ராமேஸ்வரம்)

10. த்ரியம்பகேஸ்வரர் (மஹாராஷ்டா)

11. கேதாரீஸ்வரர் - (கேதாரநாத்)

12. கிரிஷ்னேஸ்வரர் - (எல்லோரா குகை)

20. வினா: பன்னிரு திருமுறைகள் எவை?

விடை:- 1ம், 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம் திருமுறைகள் - தேவாரம்

8ம் திருமுறை - திருவாசகம்

9ம் திருமுறை - திருவிசைப்பா - திருப்பல்லாண்டு

10ம் திருமுறை - திருமந்திரம்

11ம் திருமுறை - பிரபந்தத் தொகுப்பு

12ம் திருமுறை - பெரிய புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. வினா: அஷ்ட நாகங்களின் பெயர்கள் எவை?**


| | |
|---|---|
| **விடை:- 1. அனந்தன்** | **5. சங்கபாலன்** |
| **2. வாசுகி** | **6. குளிகன்** |
| **3. தக்ஷகன்** | **7. பத்மன்** |
| **4. கார்கோடகன்** | **8. ஈசானன்** |

**22. வினா: அஷ்ட திக்பாலகர்கள் பெயர்கள் எவை?**

| | |
|---|---|
| **விடை:- 1. இந்திரன்** | **5. வருணன்** |
| **2. அக்னி** | **6. வாயு** |
| **3. யமன்** | **7. குபேரன்** |
| **4. நிருதி** | **8. மஹாபத்மன்** |

**23. வினா: திசைகள் எட்டும் எவை?**

| | |
|---|---|
| **விடை:- 1. கிழக்கு** | **5. தென்கிழக்கு** |
| **2. தெற்கு** | **6. தென்மேற்கு** |
| **3. மேற்கு** | **7. வடமேற்கு** |
| **4. வடக்கு** | **8. வடகிழக்கு** |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

*சிவாச்சாரியாரின்*

# அருள்ஜோதி

*(ஆன்மீக மலர்)*



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஆயுட் காலம் | 1000.00 |
| ஆண்டுச் சந்தா | 300.00 |
| தனிப்பிரதி | 25.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா | U. S. $ 50 |


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Tel: 2393436, 0722 422239


*Printed by: Anush Printers Col-11. Tel: 0777 244893*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org